**அரசு ஊழியர்**

ஆகஸ்ட் 2017

மலர் : 38 இதழ் : 8

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக வெளியிடுபவர் :
இரா.பாலசுப்பிரமணியன்

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்:வைகை பிரிண்டர்ஸ்&பப்ளிஷர்ஸ்,
2/38, குயவர் வீதி, ஜோன்ஸ் சாலை,
சென்னை - 600 015.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


சூடா ஒரு கோப்பை சூப்

## இயக்கத்தின் இன்றியமையாமை

குருதியைப் போல,
கோள்களைப் போல,
நதிகளைப் போல
இயங்கிக் கொண்டே
இருப்பதுதான்
மனித வாழ்வின் இயல்பு.

இயங்க தயங்குபவர்களுக்கு
ஒரு வார்த்தை
உலகம் உங்களை வாரிச் சுருட்டி
வெளியே கொட்டும் முன்
தயவுசெய்து
வெளியேறி விடுங்கள்
அல்லது
இயங்கிக் கொண்டே இருப்பதன்
அவசியத்தைப்
புரிந்து கொள்ளுங்கள்!

# போராட்டங்களே நமது இலட்சியப்பாதை! கோரிக்கை முழக்கமே நமது தேசியகீதம்!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12வது மாநில மாநாட்டின் முடிவின்படி அரசு ஊழியர் களுக்கான 8வது ஊதிய மாற்றம் செய்ய வேண்டும் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலாளர்கள், கிராம உதவியாளர் போன்றோர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், சாலை பணியாளர்களுக்கு 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், அவுட்சோர்சிங், தொகுப்பூதிய நியமனங்களை ரத்து செய்து, தற்போது பணி புரியும் ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் போன்ற 6 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்ரல் 25 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்து கொண்டிருந்தபோது அமைச்சர்கள் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி வாக்குறுதிகள் வழங்கப்பட்டது. ஆனால், அதற்கு மாறாக ஊதிய மாற்றக் குழுவின் காலத்தை 30.9.2017 வரை நீட்டித்திருப்பது அரசின் மீதான நம்பகத் தன்மையை கேலிக் கூத்தாக்கியது.

இந்நிலையில் ஒன்றுபட்ட போராட்டத்தை நடத்துவது தான் சாத்தியமானது என்பதை நமது சங்கம் முடிவெடுத்து ஏற்கனவே அமைக்கப்பட் டுள்ள ஜாக்டோ-ஜியோ அமைப்பு போராட் டங்களை தொடர்வதற்கான நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என தீர்மானித்ததன் அடிப் படையில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் பேரமைப்பு ஒன்றுகூடி 11.2.2017 அன்று நிறைவேற்றப்பட்ட கூட்டத் தீர்மானத்தின்படி கடந்த 18.07.2017 அன்று கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அன்று திரண்ட அரசு ஊழியர் - ஆசிரியர் என்ற மாபெரும் சக்தியைக் கொண்டு நாம் நம்முடைய இழந்த உரிமைகளை மீட்க வேண்டியதும், இருக்கின்ற உரிமைகளை காக்க வேண்டியதும் மிக

அவசியமானது என்பதை உணர்ந்துள்ளோம். இந்நிலையில் நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் உயர்த்தியுள்ள தமிழக அரசு அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவது மற்றும் புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்வது குறித்து எந்தவித அறிவிப்பும் வெளியிடவில்லை.

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் நோக்கம் ஊதிய மாற்றத்தை மட்டும் பெறுவதல்ல அது பழைய ஓய்வூதிய திட்டத்தை திரும்பவும் அரசு அமல்படுத்தும் வரை போராட்ட களத்திலிருந்து திரும்பி வரப்போவதில்லை என்பதை ஒவ்வொரு ஊழியரும், அலுவலரும், ஆசிரியரும், பணியாளரும் உணர்ந்து போராட்டங்களை முழு மூச்சுடன் நடத்திட வேண்டும். இந்த இலக்கினை எட்டுவதற்காக 25.7.2017ம் தேதி நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ உயர்மட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கூட்டத்தில் கீழ்க்கண்ட முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ☞ 5.08.2017 அன்று சென்னையில், கோட்டை நோக்கி மிகப் பிரமாண்ட பேரணி நடத்துவது.
- ☞ அரசு நமது கோரிக்கைகளை ஏற்காவிட்டால் 22.08.2017ம் தேதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை ஒவ்வொருவரும் உணர்வு பூர்வமாக மேற்கொண்டு தமிழகத்தில் உள்ள ஒரு அரசு அலுவலகம் கூட ஊழியர்களின்றி முடங்க வைப்பது.
- ☞ அதன்பிறகும் நம்முடைய கோரிக்கைகள் புறந்தள்ளப்படுமானால் 26.08.2017 மற்றும் 27.08.2017 தேதிகளில் மாவட்ட அளவிலான வேலை நிறுத்த மாநாடுகளை நடத்துவது
- ☞ இறுதியாக 07.09.2017 முதல் தமிழகத்தின் அரசு அலுவல்கள் அனைத்தும் முடங்கும் வகையிலான காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தொடர்வது.

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு நடத்தும் இந்த மாபெரும் போராட்டங்கள் வாயிலாக நாம் கீழ்க்கண்ட லட்சியங்களை கண்டிப்பாக அடைந்திட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டிருக்கிறோம்.

(1) அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான எட்டாவது ஊதிய மாற்றத்தை உடனடியாக ஏற்படுத்த வேண்டும், அதற்கு முன்பாக சென்ற ஊதிய மாற்றத்தில் ஏற்பட்டுள்ள முரண்களை களைந்து முரண்கள் சரி செய்யப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் எட்டாவது ஊதிய மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும், தொகுப்பூதியம் மதிப்பூதியம் மற்றும் சிறப்புக் காலமுறை ஊதியங்களை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.

(2) எட்டவாது ஊதிய மாற்றம் ஏற்படுத்தப்படும் வரை இடைக்கால நிவாரணமாக 20 சதவீத ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

(3) இவை எல்லாவற்றையும் விட புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டமே தொடர அரசாணை பிறப்பிக்க வேண்டும்.

**தனக்கு இழைக்கப்படுகிற**
**அநீதிக்கு எதிராக**
**எது கிளர்ச்சி செய்கிறதோ**
**அது உயிருள்ளது.**
**எது கிளர்ச்சி செய்யவில்லையோ**
**அது ஜடம்!**

**- சுவாமி விவேகானந்தர்**

எனவே, அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் என அணிதிரள்வோம்! இன்னொரு சுனாமியை ஏற்படுத்துவோம்! அரசு அசையாத பட்சத்தில் அடுத்தகட்ட போராட்டங்களை மேற்கொண்டு செப்டம்பர் 7 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் முன்னணி படையாக முன்னின்று, வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

❖

# போய் வா காம்ரேட்! போய் வா!
# உனக்கு எங்கள் ராயல் சல்யூட்!

உன்னுடன் இருந்தது
உன்னுள் இருந்தது
உன்னைச் சுற்றி இருந்தது
உயிர் இருந்தவரை உன்
உயிரோடு உயிராய்
இருந்தது
அன்பு, வாசமும்!

உன்னிடம்
சிகரெட் இருந்தது
ஆனால்
சீக்ரெட் எதுவும் இல்லை!

உன்னிடம்
தீப்பெட்டி இருந்தது
ஆனால்
பற்றவைத்தது என்னவோ
சிகரெட்டை மட்டும்தான்!

உன்னிடம்
நெருப்பு இருந்தது, அது
நெஞ்சில் இல்லை
உதட்டுக்கு வெளியே -
விரலிடுக்குக்கு நடுவே -
ஒரு இஞ்சுக்கு அப்பால்!

அன்று நீ சிந்திய
வியர்வை
ஆயிரமாயிரம்
அரசு ஊழியர்கள்
சோற்றில் உப்பு போட்டு
உண்ணும்
சுயகௌரவத்தைக்
கொடுத்தது!

போராட்டமே
உன் வாழ்க்கையாய்
போனது.
பணியிலிருக்கும் வரை
உரிமைக்காக போராடினாய்!
ஓய்வுக்குப்பிறகு
ஆரோக்கியத்திற்காகப்
போராடினாய்!
கடைசி காலத்தில்
உயிருக்காகப் போராடினாய்!

நீ
அரசு ஊழியர் சங்கதின்
அஷ்டாவதானி
உன்னால் இன்று முதல்
நாங்கள் ஆனோம்
கஷ்டாவதானி!

வெண்ணிற
உடையில் வந்த
கறுப்பு தேவதூதன்
வெண்தாடி பூணாத
ஈரோட்டுக் காரன்! - தோழா நீ

வெண்ணிற
உடையில் வந்த
கறுப்பு தேவதூதன்
வெண்தாடி பூணாத
ஈரோட்டுக் காரன்!

நறுக்குமொழி பேசிய
முறுக்குமீசை பேணாத
வல்லிக்கேணி பாரதி! - நீ...
அரசு ஊழியர் உரிமைக்காக
நறுக்கு மொழி பேசிய
முறுக்குமீசை பேணாத
திருவல்லிக்கேணி பாரதி!

அர்ஜீனனுக்கு தேரோட்டிய
பார்த்தசாரதியை
நாங்கள் பார்த்ததில்லை
நாங்கள் பார்த்த சாரதி
நீ தான் - ஆமாம்

அரசு ஊழியர் இயக்கம்
என்ற தேரை
பார்த்து பார்த்து ஓட்டிய...
நாங்கள் பார்த்த
தேரடி வீதி பார்த்தசாரதி
நீ தான்!

அதனால்தானோ
அந்த பார்த்தசாரதிக்கு
பக்கத்திலுள்ள
சங்க கட்டிடத்தில்
சில கணமேனும்
பள்ளிகொள்ள
தேரடித்தெருவைத்
தேர்ந்தெடுத்தாயோ?

நீ இறுதியாக
பள்ளிகொள்ள
தேர்ந்தெடுத்த
இந்த இடமே
இனி எங்கள்
பள்ளிக்கூடம்!

கூடம் முழுவதும்
வியாபத்திருக்கும்
உன் ஆன்மா
இனி எங்கள்
கூடுதல் பலம்!
ஊழியர் உரிமைக்காக
போராட இனி
கூட வரும் உன்
ஆன்ம பலம்!

ஈர நெஞ்சில்
விரல் தொட்டு
செலுத்துகிறோம்
ராயல் சல்யூட்!

போய் வா காம்ரேட்
போய் வா!

**- ஜிஜி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் போராட்ட அறைகூவல்...

# ஆழ்கடலின் அமைதி போதும் - இனி ஆர்ப்பரிக்கும் அலைகள் மோதும்!

### துடிப்புமிக்க போராட்டத்தின் துவக்கம்



**த**மிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் புதிய ஓய்வூதியத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் தொடரவும், ஊதிய மாற்றத்தை உடனடியாக ஏற்படுத்தவும், ஊதிய மாற்றம் காலதாமதமாகும் நிலையில் 20 சதவீத இடைக்கால நிவாரணம் கேட்டும் மேலும் சில கோரிக்கைகளை வலியுறுத்தியும் பலகட்ட இயங்கங்களையும் போராட்டங்களையும் தொடர்ந்து நடத்திக் கொண்டு வந்துள்ளது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் உரிமைகளை ஒழித்துக்கட்ட நினைக்கும் அதிகார வர்க்கத்தை எதிர்த்து நாம் நடத்தி வந்த சமரசமற்ற போராட்டங்களின் விளைவாக இப்போது எல்லா சங்கங்களும் ஒன்று திரண்டு 10 லட்சம் அரசு ஊழியர் - ஆசிரியர்கள் ஒருமித்த சக்தியாக போராட்டத்தில் பங்கேற்கக்கூடிய களம் அமைக்கப்பட்டுள்ளது என்பதும் அக்களத்தின் முதல் தீப்பொறியாக, போரின் முதல் கத்தி முனையாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் அதன் உறுப்பினர்களும் உள்ளனர் என்பதும் உற்சாகத்தையும், உத்வேகத்தையும் தூண்டியுள்ளது.

2016 பிப்ரவரியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய காலவரையற்ற வேலை நிறுத்தம்தான் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் சட்டப்பேரவை விதி எண்.110 அறிவிப்புகளாக வெளி வருவதற்கும், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர்வது குறித்து பரிசீலித்து அறிக்கை அளிக்க வல்லுநர் குழு அமைக்கவும் காரணமாக இருந்தது என்பதை உலகறியும். நமது சங்கம் தான் ஊதிய மாற்ற அலுவலர் குழுவை அமைக்கவும், ஊதிய மாற்றம் ஏற்படுத்தும் வரை 20 சதவீத இடைக்கால நிவாரணம் வழங்கவும் ஆரம்பம் முதலே அரசை நிர்ப்பந்தித்து வந்துள்ளது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

2017 ஜனவரியில் திருவண்ணாமலையில் நடந்த திருப்புமுனை மாநாட்டில் ஆறு அம்ச கோரிக்கைகளை அறைகூவல் தீர்மானங்களாக்கி அரசுக்கு ஆரம்ப எச்சரிக்கை செய்ததும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமே! ஏப்ரல் 25, 2017ல் நாம் மேற்கொண்ட காலவரையற்ற வேலை நிறுத்தம் இவ்வளவு பெரிய எழுச்சிப் பேரியக்கம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்துவிட்டது என்பதை நினைக்கும் போது ஒருபுறம் பெருமிதமும், மறுபுறம் பொறுப்புணர்ச்சியும் திரண்டு எழுகின்றன. நம்முடைய போராட்டங்களும், அமைச்சர் பெருமக்கள் தந்த வாக்குறுதி ஏமாற்றங்களும்தான் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பை கட்டுறுதியுடன் கட்டமைக்க காரணமாக அமைந்துள்ளது என்பதும் மிகையில்லை.

### கோரிக்கை ஆர்ப்பாட்ட காட்சியும் வரலாற்றின் நீட்சியும்

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் அழைப்பை ஏற்று 18.7.2017ம் தேதி தமிழகமெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் கோரிக்கை ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. மெரினாவின் ஆர்ப்பரித்த அலைகள், சேப்பாக்கம் வளாகத்தைச் சுற்றி வளைத்தது போல் இருந்தது 18.7.2017ம் தேதி நமது ஜாக்டோ - ஜியோ கூட்டமைப்பின் கோரிக்கை ஆர்ப்பாட்ட நிகழ்வு. எங்கெங்கு காணினும் அரசு ஊழியர்-ஆசிரியர் தலைகள். எறும்புகளைப் போல் சாரைசாரையாக ஊர்ந்தவாறு கைகளை நீட்டி கோரிக்கை முழக்கமிட்ட காட்சி, 1988 ஜாக்டீ-ஜியோ மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் ஜாக்டோ - ஜியோ கூட்டமைப்பின்



போராட்டங்களின்போது ஒன்றுதிரண்டு, அரசுக்கு நெருக்கடி கொடுத்து, வென்று காட்டிய வரலாற்று நீட்சியின் காட்சியாக விரிந்தது.

சென்னையில் மட்டுமல்ல, தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடந்த நமது கூட்டமைப்பின் கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று புதிய வரலாற்றை எழுதிய எழுச்சிமிகு அரசு ஊழியர் - ஆசிரியர் திரட்சியைப் பார்த்து வெலவெலத்துப் போயிருக்கிறது அரசு நிர்வாகமும், அதிகார வர்க்கமும். ‘‘வெள்ளம் போல் அரசு ஊழியர்-ஆசிரியர் கூட்டம், வீரங்கொள் கூட்டம், அவர் துறைகளால் பலரே ஆயினும் குறைகளை கோரிப் பெறுவதில் ஒன்றே’’ என்ற பாவேந்தரின் பாடலை ரீ-மிக்ஸ் செய்து ரீங்கரித்துப் பாடினால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தது ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் எழும்பிய கோரிக்கை போர்க் குரல்கள்.

## மக்களுக்காக செயல்படாத அரசு

இனி இந்த அரசை "செயல்படாத அரசு" என்று விளிப்பதை விட "மக்களுக்காக செயல்படாத அரசு" என்று பொழிப்பதே சாலப் பொருத்தமாக இருக்கும். காவிரி பிரச்சனை பற்றி கவலை இல்லை, வரி உயர்வைப் பற்றி வருத்தமில்லை, 'நீட்' தேர்வு குறித்து நிச்சயமில்லை, ஹைட்ரோ கார்பன் திட்டத்தினை தடுப்பதில் அக்கரையில்லை, விவசாயிகள் போராட்டத்திற்கு விடிவு இல்லை. இந்த வரிசையில் அரசு ஊழியர் - ஆசிரியர் ஊதிய மாற்றமும் கண்டுகொள்ளப்படவில்லை.

யார் என்ன குறை கூறினால் என்ன, நான்காண்டுகளுக்கு நாற்காலியைப் பிடித்துக்கொண்டு, ஆட்சியை தக்க வைத்துக்கொண்டு, சேர்வதை சேர்த்துக்கொண்டு, சேர்ந்ததை அனுபவித்துக் கொண்டு, நம்முடைய நலனை மட்டும் நாம் பார்த்துக் கொண்டால் போதும் என்ற சுயநல மனப்பக்குவத்திற்கு ஆட்சியாளர்கள் வந்துவிட்டதற்கான அறிகுறிதான் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்களுக்கான சம்பள உயர்வும், ஓய்வூதிய உயர்வும்.

பத்தாண்டுகளுக்கும் மேலாக பழைய பென்சன் திட்டத்தை மீண்டும் அமல்படுத்துங்கள் என்று நாம் போராடி வருகிறோம். கமிட்டி மேல் கமிட்டி போட்டு கண்துடைப்பு நாடகம் தான் நடக்கிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் அறிவித்து 20 மாதங்களாகியும் தமிழக அரசு ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியும் ஆட்சியாளர்கள் அலுவலர் குழுவை அமைத்து அதன் காலக்கெடுவை நீட்டித்து அரசு ஊழியர் - ஆசிரியர் வாழ்வாதாரத்தின் குரல்வளையை நெறிக்கப் பார்க்கிறார்கள். சரி, அலுவலர் குழு காலவரையை நீட்டித்து விட்டீர்கள், பரவாயில்லை, இடைக்கால நிவாரணமாவது வழங்குங்கள் என்று கேட்டால் "நிதியில்லை" என்று உதட்டை பிதுக்குகிறார்கள், வேறு வழியில்லை பொறுத்துக் கொள்ளுங்கள் என்று கையை சொடுக்குகிறார்கள். அரிச்சந்திரனின் அருமைத் தம்பிகள் போல மாண்புமிகு அமைச்சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார் மற்றும் உதயகுமார் ஆகியோர் ஜூலைக்குள் ஊதிய மாற்றம் கண்டிப்பாக அமல்படுத்தப்படும் என்று உறுதிமொழி அளித்துவிட்டு, "உண்மையிலேயே நம்பிட்டீங்களா? அரசியலில் இதெல்லாம் சர்வசகஜமப்பா!" என்று நமட்டுச் சிரிப்பை நமக்கு பரிசாக வழங்கியிருக்கிறார்கள்.

நாட்டில் வறட்சி, பசி, பஞ்சம், பட்டினி எல்லாம் தலைவிரித்தாடுகிறது என்று நம் எல்லோருக்கும் உபதேசம் செய்த இவர்கள்தான், நடந்து முடிந்த சட்டசபை கூட்டத்தின் கடைசிநாளில், ரூ.55000/- ஆக இருந்த எம்எல்ஏக்கள் சம்பளத்தை எந்தவித கமிஷனும் போடாமல், யாருடைய பரிந்துரையும் இல்லாமல் ரூ.1,05,000/-ஆக 100 சதவீத அளவிற்கு அவர்களாகவே உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, ரூ.12,000/-ஆக இருந்த எம்எல்ஏக்கள் ஓய்வூதியத் தொகையை ரூ.20,000/- ஆக உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். இவர்கள் சம்பளத்தையும், ஓய்வூதியத்தையும் உயர்த்தி அமைத்துக் கொள்வதற்கும் வறட்சி, பசி, பஞ்சம், பட்டினி போன்றவற்றிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை நாட்டு மக்களும், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் நன்றாகவே இப்போது புரிந்து கொண்டு விட்டனர். அமைச்சர்களுக்கும் எம்எல்ஏக்களுக்கும் மாதத்திற்கு ரூ.50000/- ஊதியம் உயர்த்தப்பட்டதால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு

கூடுதலாக எவ்வளவு செலவாகும் என்ற விவரங்கள் பத்திரிகை செய்திகளில் வரவில்லை என்பதை விட வரவிடாமல் பார்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதுதான் நிதர்சனம். அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி வழங்கினால்கூட அதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவினங்கள் கொட்டை எழுத்துக்களில் சுட்டிக்காட்டப்படும். எதற்காக இதைச் செய்கிறார்கள்? மக்களுக்கு அரசு ஊழியர்கள் மீது கோபமும் வெறுப்பும் ஏற்பட வேண்டாமா? அதற்காகத்தான்.

## சட்டமன்ற உறுப்பினர் தனியரசுவின் தனி ஆவர்த்தனம்

தனியரசு என்கிற ஒரு எம்எல்ஏ அதிமுக அரசின் அடிவருடி, சட்டசபையில் பேசுகிறார், அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஏற்கெனவே அதிகப்படியான சம்பளம் வாங்குகிறார்கள் அவர்கள் சம்பளத்தை குறைக்க வேண்டும் என்று. அவரேதான் கூறுகிறார், மக்கள் தொண்டாற்றும் எம்எல்ஏக்களின் சம்பளத்தை இரு மடங்காக்க வேண்டும் என்று. கூவத்தூர் முதல் குமரிக் கரை வரை இவர்கள் ஆற்றி வரும் மக்கள் தொண்டை இந்திய நாடே பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கும் நிலையில் எம்எல்ஏக்களுக்கு சம்பள உயர்வு கேட்டு சட்டசபையில் இவர் வைத்த கோரிக்கை மட்டும் உடனடியாக ஏற்கப்பட்டு செயல்படுத்தப்பட்டிருக்கிறது. என்ன செய்வது, விவசாயிகளும், தொழிலாளர்களும், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வறுமையில் வாடினால் தப்பில்லை. ஆனால் எம்.எல்.ஏ.க்களும், மந்திரிகளும் வறுமையில் வாடக்கூடாது என்ற உயரிய எண்ணத்தில் எந்த அடிப்படை விளக்கமோ, கணக்கீடோ காட்டப்படாமல் சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம், ஓய்வூதியம், படிகள் போன்றவை பல மடங்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. வாழ்க ஜனநாயகம்.

## 'துக்ளக்'கில் வீசும் துர்வாசம்

நடுநிலை பத்திரிகை போல் செயல்பட்டுக்கொண்டு அரசின் விசுவாசியாக அதிகப்படியாக முகம் காட்டும் 'துக்ளக்' பத்திரிகையில் அதன் நிருபர், அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் 2003ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியில், துணிச்சலாக காலவரையற்ற போராட்டம் நடத்தி கோரிக்கைகளை வென்றதையும், 2016ல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஜெயலலிதா ஆட்சியில் காலவரையற்ற போராட்டம் நடத்தி சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை ஜெயலலிதா வெளியிட வைத்த வரலாற்றை கிழித்து எறிந்துவிட்டு "ஜெயலலிதா உயிருடன் இருந்தபோது அவரது கட்சிக்காரர்கள் முதல் அரசு ஊழியர்கள் வரை சகலரும் வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டுதான் திரிந்தனர். அவர் இறந்த பிறகு எல்லோருக்கும் குளிர்விட்டுப் போய்விட்டது, ஆளாளுக்கு ஆர்ப்பாட்டம். போராட்டம். தர்ணா என்று புறப்பட்டு விடுகிறார்கள்.

இந்த அரசு ஊழியர்கள் இப்போதுள்ள அரசு பலவீனமான அரசு என்பதை தெரிந்து கொண்டு இடைக்கால நிவாரணம் கொடு இல்லையென்றால் போராட்டம்தான் என்று அரசாங்கத்தை மிரட்டுகிறார்கள்" என்று எழுதுகிறார். சமூக அக்கறையுள்ளதாக காட்டிக்கொள்ளும் ஒரு பத்திரிகையின் நிருபர், இதே கட்டுரையில் அரசுக்கு வருமானத்தை அள்ளித் தருகின்ற மதுக்கடைகளை மூடவேண்டுமென்று ஊருக்கு ஊர் பொதுமக்கள் போராட்டம் நடத்துவதை கண்டித்து குறைபட்டுக் கொண்டிருக்கிறார். அரசுக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது, மதுக்கடைகளை மூடச்சொல்லி மக்கள் போராட்டம் நடத்தலாமா? என்று கேட்கிறார். இதுதான் 'துக்ளக்' இதழின் பத்திரிகை தர்மமாம்.

## எலும்புத் துண்டுகளுக்காக வாலாட்டும் இராஜ அடிமைகள்

இவை இரண்டை விடவும் ஜீரணிக்க முடியாத ஒன்று உள்ளது. அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராட்டம் நடத்தும் போதெல்லாம் அரசாங்கத்தின் ராஜஅடிமையாக இருந்து செயல்படுகின்ற ஒருவர், "கேட்காமலேயே அரசு கொடுக்கும், போராடத் தேவையில்லை. போராட்டம் அரசுக்கும் மக்களுக்கும் எதிரானது, நாங்களும் எங்கள் தலைமையின் கீழ் இயங்கும் 160 சங்கங்களும் போராட்டத்தில் பங்கேற்கவில்லை" என்று அரசுக்கும், பத்திரிகைகளுக்கும் செய்தி கொடுத்து நாங்கள் அரசை தாங்கிப் பிடிப்போம் என்று சொல்லி போராட்டங்களை மழுங்கடிக்கப் பார்ப்பதும், அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களிடையே குழப்பத்தையும், பிரிவினையையும் ஏற்படுத்தும் எட்டப்ப வேலையை செய்து கொண்டிருக்கும் வெறும் லெட்டர்பேடு சங்கமாக மாறிவிட்ட அரசு அலுவலர் ஒன்றியம் செய்து வரும் இதுபோன்ற துரோகச் செயல்களை அரசு ஊழியர்கள் -

ஆசிரியர்கள் அனைவரும் புரிந்துகொண்டு அந்த எட்டப்ப அறிக்கைகளை அலட்சியப்படுத்த வேண்டும். அந்த வரிசையில் இப்போது, மூன்றாக உடைந்து, ஓய்வு பெற்றுவிட்ட தலைவரின் கீழ் எட்டு பேரை உறுப்பினர்களாகக் கொண்ட அரசுப் பணியாளர் சங்கமும் சேர்ந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற அரசின் அடிவருடி சங்கங்கள் கூட்டமைப்பில் சேர்ந்து போராடாவிட்டால்கூட பரவாயில்லை. அவர்கள், அனைத்து ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி அமைதியாகவாவது இருக்கலாம். ஆனால், யாரோ போடும் எலும்புத் துண்டுகளுக்காக இவர்களால் வாலாட்டாமல் இருக்க முடியவில்லை என்பது இவர்கள் அரசின் ஏவலாளிகளாக மாறி ஊடகங்களில் அறிக்கை வாசிப்பதிலிருந்து தெரிகிறது. இந்த பட்ட மரங்களை வெட்ட வேண்டாம் விட்டுவிடுவோம்.

## தொலைக்காட்சி ஊடகத்தின் உள்நோக்கம்

ஒரு தொலைக்காட்சி ஊடகத்தில் நமது கோரிக்கை ஆர்ப்பாட்டம், அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் கோரிக்கைக்காக போராட வரவில்லை, செல்பி எடுத்துக்கொள்ளவும், இன்பச் சுற்றுலா செல்லவும்தான் நடத்தப்பட்டது என்கிற வகையில் கொச்சைப்படுத்தப்பட்டு ஒளிபரப்பப்பட்டுள்ளது. இதன்மூலம் அந்த தொலைக்காட்சி ஊடகத்தின் உள்நோக்கம் என்னவென்று நமக்குத் தெரியாமல் இல்லை.

## முன் நிற்க, முந்தி நிற்க, முழுமையாக நிற்க, போராட்ட களத்தில்!

ஆக, அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு எதிராக வரிந்து கட்டி பிரச்சாரம் செய்ய பத்திரிகைகளும், எம்,எல்,ஏ.க்களும், லெட்டர்பேடு சங்கங்களும், தொலைக்காட்சி ஊடகங்களும் முடுக்கிவிடப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கு உதவ அதிகார வர்க்கமும், அரசாங்கமும் தயாராக உள்ளன என்பதை நாம் அனைவரும் கவனத்துடன் கருத்தில் கொள்ளவேண்டும். இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு இடையில்தான் நாம் நமது கோரிக்கைகளை ஒன்றுபட்ட பெரும் சக்தியின் மூலமாக மட்டுமே வென்றெடுக்க முடியும். கோரிக்கைகளை வென்றெடுப்பதிலும், அதற்கான இயக்கங்களிலும், போராட்ட களங்களிலும் அரசு ஊழியர் சங்கத்தின் முன்னணி ஊழியர்களும், நிர்வாகிகளும் எவ்வித சமரசத்துக்கும் இடம் கொடுக்காமல் இலக்கை தொடும் வரை போராட்ட களத்தில் முன்நிற்க வேண்டும், முதலாக நிற்க வேண்டும். முழுமையாக நிற்க வேண்டும், போராட்டத்தின் முடிவு கிட்டும் வரை நிற்க வேண்டும். இது நம்மால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது என்ற எண்ணத்துடன் நிற்க வேண்டும்.

## ஆழ்கடலின் சுயதரிசனம்தான் ஆர்ப்பரிக்கும் அலைகள்

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் அனைவரும் ஆகஸ்ட் 5ஆம் தேதி சென்னையில் அணிதிரண்டது. இன்னொரு சுனாமி பேரலை எழுந்தது போல் இருந்தது. 1988ல் கவர்னர் ஆட்சியில் சென்னை நகரம் முழுவதையும் ஆக்கிரமித்து அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்தை குதிரைப் படைகளைக் கொண்டு ஒடுக்கப்பார்த்த கவர்னர் அரசால் ஒன்றும் செய்ய முடியாமல் வேறு வழியில்லாமல் கோரிக்கைகளை ஏற்க செய்த வரலாற்றின் முன்னோடிகளைக் கொண்ட இயக்கம்தான் இந்த ஜாக்டோ - ஜியோ பேரியக்கம் என்பதை மீண்டும் ஒருமுறை அரசுக்கும், அதிகார வர்க்கத்திற்கும் உணர்த்த வேண்டிய அவசியம் உண்டாகியிருக்கிறது

தோழர்களே!

நம்முடைய போராட்டம் நியாயமானது. கோரிக்கைகள் நிறைவேற்றத்தக்கது என்பதை நமது லட்சியப் போராட்டம் அரசுக்கு உணர்த்த வேண்டும். ஆகவே தோழர்களே ஆழ்கடலின் அமைதியாய் இருந்தது போதும், ஆர்ப்பரிக்கும் அலைகளாக மாறுவோம். பொய்யுரை பேசி, காலங்கடத்தும் நயவஞ்சக அதிகார வர்க்கத்திற்கும், ஆட்சியாளர்களுக்கும் நாம் யாரென்று காட்டுவோம்!

காலவரையற்ற போராட்டத்திற்கு தயாராவோம்!

**துடிக்கட்டும் புஜங்கள்! ஜெயிக்கட்டும் நிஜங்கள்!**

**முடியட்டும் வதங்கள்! மலரட்டும் புது யுகங்கள்!** ❖

துக்ளக் கட்டுரைக்கு பதில்

# இது ஜர்னலிசம் அல்ல, வெறும் ஜன்னலிசம்!

அன்புள்ள துக்ளக் ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்களது 19.7.2017 துக்ளக் இதழில் துர்வாசர் எழுதியிருக்கும் "அரசு ஊழியர் சங்கத்தின் மிரட்டல்" கட்டுரையை படித்தேன். ஜெயலலிதா இறந்தபிறகு தமிழக அரசை தெருவில் போகிற வருகிறவனெல்லாம் மிரட்டுவதாகவும், அவர் உயிரோடு இருந்தபோது சகலரும் வாலைச் சுருட்டிக்கொண்டு திரிந்தனர் என்றும், ஜெயலலிதா இறந்த பிறகு எல்லோருக்கும் குளிர்விட்டுப் போய்விட்டது என்றும் ஏகடியம் செய்திருக்கிறார் துர்வாசர்.

இன்று மாலைக்குள் 'ஜன்னல் வழியே' பகுதிக்கு கட்டுரை தரவேண்டும் என்பதற்காக, செய்தித் தாள்களில் ஏதாவது நியூஸ் அகப்படுகிறதா என மேய்ந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் போராட்டச் செய்தியை படித்தவுடன் 'அல்வா'த் துண்டு கிடைத்தது போல புளங்காகிதம் அடைந்து, "இவர்களைப் பற்றி எவ்வளவு எழுதினாலும், எவனும் கேட்க மாட்டான்" என முடிவு செய்து, சகட்டுமேனிக்கு சகதியை வாரி இரைத்திருக்கிறார் அவர். முதலில் அவரை ஜன்னலுக்கு வெளியே வந்து பார்த்து, நாட்டு நடப்பை எழுதச் சொல்லுங்கள். ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டு எழுதினால் சிறையில் இருப்பவனும் சிரசாசனம் செய்வது போல்தான் தெரியும்.

ஜெயலலிதா 2003ஆம் ஆண்டில் முதல்வராக இருந்தபோது காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியவர்கள்தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர். ''போராட்டம் நடத்தினால், எஸ்மா, டெஸ்மா என எல்லாச் சட்டங்களும் அரசு ஊழியர்கள் மீது பாயும்" என்று சட்டப்பேரவையில் ஜெயலலிதா அம்மையார், கொக்கரித்துப் பேசிய ஆணவப் பேச்சையும், ஒரே அரசாணையில் 1,76,000 அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் செய்து, போராட்டத்தில் கலந்துகொண்ட பெண் ஊழியர்கள் மீது அவர்கள் அடுத்த நாள் அலுவலகத்துக்கு வரவில்லை என்றால் விபச்சார வழக்கு போட்டு உள்ளே தள்ளுவேன் என காவலர்களை வைத்து மிரட்டியும், ஆண் ஊழியர்கள் அலுவலகம் வராவிட்டால் அவர்கள் மீது கஞ்சா வழக்கு போட்டு உள்ளே தள்ளுவேன் என அச்சுறுத்த வைத்தும் தன் கோர முகத்தை காட்டிய போக்கையும் எதிர்த்து நின்று போராடி வெற்றி கண்டவர்கள்தான் அரசு ஊழியர் சங்கத்தினர்.

அதோடு, அந்த அம்மையார் சொன்ன "தமிழக மக்கள் தொகையில் அரசு ஊழியர்களும் அவர்தம் குடும்பத்தினரும் வெறும் 2 சதவீதம் பேர்தான். அவர்களின் வாக்கு எனக்குத் தேவையில்லை" என்ற இறுமாப்பு வார்த்தைகளுக்காகவே வாலைச் சுருட்டிக்கொண்டு சும்மா இல்லாமல் அடுத்த தேர்தலில் அவருக்கு எதிராக பிரச்சார இயக்கம் மேற்கொண்டு தோல்வியைத் தழுவ வைத்ததில் பெரும் பங்கு தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு உண்டு என்பது நாடே அறிந்த செய்தி.

அதேபோல 2016ஆம் ஆண்டு அதே ஜெயலலிதா ஆட்சியில் சட்டமன்றம் நடந்து கொண்டிருந்த பிப்ரவரி மாதத்தில் 10ம் தேதி முதல் இதே அதிமுக அரசுக்கு எதிராக, கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 10 நாட்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியதையும், போராட்டத்தின் தீவிரத்தை உணர்ந்த முதல்வர் ஜெயலலிதா, சட்டமன்றத்தில் சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை வெளியிட்டு போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்ததும் எல்லா ஊடகங்களும் அறிந்த வரலாறு. ஆனால், நேர்மையான பத்திரிகை நடத்துவதாக சொல்லிக்கொள்ளும் நீங்களும், உங்கள் துர்வாசரும், அரசு ஊழியர்கள் அனைவரும் ஜெயலலிதாவுக்கு பயந்து ஒடுங்கிக் கிடந்தது போன்று எழுதுவதை பத்திரிகை தர்மம் என்று சொல்வதா? இல்லை கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் என்று கூறுவதா? எனத் தெரியவில்லை.

ஒரு நேர்மையான பத்திரிகையாளர் என்பவர் ஒரு கட்டுரையை எழுதும்போது அறம் காக்கும் நீதிபதியைப் போல் நெறி பிறழாமல் எழுத வேண்டும் என்பது உயரிய நோக்கம் கொண்ட பத்திரிகையாளர்கள் பின்பற்றுகிற பண்பு. உங்கள் கட்டுரையாளர் அத்தகைய பண்பாளராக இருக்க வேண்டாம், குறைந்தபட்சம் அதைப் படித்து ஒப்புதல் செய்கிற ஆசிரியர் நீங்களாவது அந்தக் கட்டுரையில் உள்ள உண்மைத் தன்மை குறித்து ஆராய்ந்து ஒப்புதல் செய்திருக்க வேண்டாமா? பொய்யறம் கூறி பரபரப்பு ஜர்னலிசம் செய்துதான் 'துக்ளக்' இதழை தூக்கி நிறுத்த வேண்டிய துர்ப்பாக்கியம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா என்ன?

இடைக்கால நிவாரணம் கொடு, இல்லையேல் போராட்டம் தான் என்று எடப்பாடி அரசை அரசு ஊழியர் சங்கம் துணிந்து மிரட்டுவதாகவும், பொழுது விடிந்து பொழுது போனால் வேலை நிறுத்த அறிவிப்பை வெளியிடுவதே வேலையாகப் போய்விட்டது என்றும் நக்கலடித்திருக்கிறார் துர்வாசர். நாடே பல பிரச்னைகளில் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கிறது, கோடை வறட்சியிலிருந்து அது மீளவே இல்லை, அரசுக்கு வருமானத்தை அள்ளித் தருகிற மதுக்கடைகளை மூட வேண்டுமென்று ஊருக்கு ஊர் பொது மக்கள் போராடுகிறார்கள் என்கிறார். அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்துவதை மட்டுமல்ல மதுக் கடைகளை அதுவும் அரசாங்கத்திற்கு லாபத்தை அள்ளித் தருகிற மதுக்கடைகளை மூட வேண்டும் என்று பொதுமக்கள் போராடுவதைக்கூட எவ்வளவு பெரிய அநியாயம் என்று அதிமுகவின் கொள்கை பரப்புச் செயலாளரைப் போல் கொக்கரித்திருக்கிறார். ஆக, நாட்டில் என்ன அநீதி நடந்தாலும் வீதிக்கு வீதி மதுக்கடைகள் திறக்கப்பட்டாலும் 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது' என்று வாய் மூடி பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். போராட்டத்துக்கெல்லாம் போனால் அது அநியாயம், அடாவடி, அரசாங்கத்தை மிரட்டுவது என்பதாக துக்ளக்கின் நிலைப்பாட்டை துகிலுரித்திருக்கிறார் துர்வாசர்.

மாதம் பிறந்தால் சுளை சுளையாகச் சம்பளம் இது தவிர வீட்டு வசதி, மருத்துவம், பண்டிகை முன்பணம், போனஸ் என்று தமிழக அரசு ஊழியர்களுக்கு கோடானு கோடிளை கொட்டியழுகிறதாம் அரசாங்கம். அவை போதாமல் போராட்டம் நடத்துகிறார்களாம் அரசு ஊழியர்கள். 8வது சம்பளக் கமிஷன் சிபாரிசுகளை ஆராய அரசு நியமித்த குழுவுக்கு மேலும் 3 மாதம் அவகாச நீட்டிப்பு கொடுத்ததால் என்ன குடி மூழ்கிப் போய்விட்டது. இடைக்கால நிவாரணம் கொடு என்று போர்க்கொடி பிடிப்பானேன்? இந்த அரசு ஊழியர்கள் என்ன சோத்துக்கு வழியில்லாமலா கிடக்கிறார்கள்? என்று கேட்கிறார்.

மத்திய அரசின் ஊதிய மாற்றம் 1.1.2016ம் தேதி ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கு ஊதிய மாற்ற நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான நிலுவைகளையும், ஊதியத்தையும் பெற்றுவிட்டதோடு ஊதியக் குழு பரிந்துரைத்த படிகளையும் (Allowance) அவர்கள் பெற்று வரும் நிலையில் கடந்த 19 மாதங்களாக தமிழக அரசில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அது வழங்கப்படாமல் உள்ளது. அது குறித்து அரசுடன் பேசுவதற்கே ஒரு போராட்டம் நடத்தி அதன்பிறகு ஏப்ரல் 2017ல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அந்தப் பேச்சுவார்த்தையில் தமிழகத்தின் அமைச்சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார் மற்றும் உதயகுமார் ஆகியோர் ஜுலைக்குள் ஊதிய மாற்றம் நூறு சதவீதம் ஏற்படுத்தப்பட்டு விடும் என்றும், அப்படி ஏற்படுத்தப்படாவிட்டால் இடைக்கால நிவாரணம் பற்றி பரிசீலிக்கலாம் என்றும் எக்காரணம் கொண்டும் அலுவலர் குழுவின் காலவரை மூன்று மாதங்களுக்கு மேல் நீட்டிக்கப்படாது என்றும் உறுதிமொழி அளித்துவிட்டு அது மீறப்பட்டுள்ள நிலையில், மீண்டும் அமைச்சர்களை சந்தித்துப் பேச அனுமதி வழங்கப்படாத காரணத்தினாலேயே நாங்கள் இடைக்கால நிவாரணமாவது வழங்க வேண்டும், இல்லாவிட்டால் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என அறிவிப்பு செய்தோம். ஒரு பிரச்சனை என்றால் சம்பந்தப்பட்டவர்களை கூப்பிட்டு பேசி சுமுகமாகத் தீர்க்க வேண்டும்.

2017 ஜனவரியில் இதை நாங்கள் மாநாட்டு தீர்மானமாக அனுப்பினோம்; பதில் இல்லை. வேலை நிறுத்த நோட்டீஸ் அனுப்பினோம்; யாரும் கூப்பிடவில்லை. வேலை நிறுத்த ஆயத்த மாநாடு நடத்தும்போது

அமைச்சர் செங்கோட்டையன் தொலைபேசியில் பேசுகிறார், தலைமைச் செயலகம் வரச் சொல்கிறார். தலைமைச் செயலகம் போனால் தலைமைச் செயலாளர் நீங்கள் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள், உங்களுடன் பேச முடியாது என்று விரட்டியடிக்கிறார். வேலை நிறுத்தம் தொடங்கியதும் அரசு அலுவலகங்களில் பணிகள் ஸ்தம்பிக்க ஆரம்பித்ததும், திரும்பவும் அமைச்சர் செங்கோட்டையன் அழைக்கிறார். போய் பேசுகிறோம். ஜுலைக்குள் ஊதிய மாற்றம் செய்து தருவதாக மற்ற அமைச்சர்களுடன் சேர்ந்து உறுதியளிக்கிறார். ஆனால் இப்போது எந்தவித அசைவும் இல்லை. அலுவலர் குழுவின் காலவரையை நீட்டித்துவிட்டு அவரவர் வேலைகளை அமைச்சர்கள் பார்க்க ஆரம்பித்து விட்டனர்.

இயன்றவரை இழுத்தடிப்பது, போராட்டம் நடத்தினால் கூப்பிட்டு பேசி சில பொய்யான உறுதிமொழிகள் கொடுத்து தள்ளிப்போடுவது என்று 20 மாதங்கள் கடத்தப்பட்ட நிலையில் உங்கள் துர்வாசர், அரசு ஊழியர்கள் விருப்பப்பட்டு போராட்டம் நடத்துவதைப் போல கட்டுரை வரைகிறார். ஒரு விஷயம் தெளிவுபடுத்த விரும்புகிறேன், அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் அன்றைய தினத்தின் சம்பளம் அரசாங்கத்தில் பிடித்தம் செய்யப்படுகிறது என்பதையும் தங்கள் ஊதியத்தை இழந்துதான் ஊழியர்கள் போராட்டக் களம் வருகிறார்கள் என்பதையும் ஊடகவியலாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சம்பளம் போக கிம்பளம் தனி என்றும், அரசு ஊழியர்கள் எல்லோரும் லஞ்சம் வாங்குவதாகவும் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார் துர்வாசர். ஏதோ ஒரு சில அரசு ஊழியர்கள் லஞ்சம் வாங்குவதை வைத்து எல்லா ஊழியர்களையும் அப்படியே எடை போடக்கூடாது. உங்கள் பத்திரிகையாளர்களில் சில பேர் கூடத்தான் முதல் பக்கத்தில் நியூஸ் போடுவதற்கும், போட்டோவுடன் செய்தி போடுவதற்கும் என்றும் ஒரு தொகை நிர்ணயித்து வாங்குகிறார்கள். பிரஸ் மீட்களில் பத்திரிகையாளர்களுக்கு கொடுக்கப்படும் அன்பளிப்புகள் என்பவை லஞ்சமில்லாமல் என்னவாம்? பத்திரிகை நிறுவனம்தான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கிறதே பிறகு ஏன் அன்பளிப்புகளுக்காக அலைகிறார்கள் என்று நாங்களும் கேட்கலாம்தான். ஆனால் யதார்த்தம் அதுவல்ல, எல்லா இடங்களிலும் இதுபோன்ற விதிமீறல்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த விகிதாச்சாரம் அதிகரித்து விடாமல் இருக்க வேண்டுமானால் அரசு ஊழியர்களுக்கு கௌரவமான ஊதியம் கொடுத்துவிட்டு லஞ்சம் வாங்குகிற ஊழியர்களை தண்டிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு. கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான பொருளாதாரம் இல்லாதபோது அவர்கள் தவறான வழிகளை தேர்ந்தெடுத்துவிடும் சூழ்நிலை ஏற்பட்டு விடக்கூடாதே என்பதற்காகத்தான் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்படும் ஊதிய மாற்றத்தை உடனடியாக அமல்படுத்த அரசுகளை நாங்கள் நிர்ப்பந்திக்கிறோம்.

துர்வாசர் கூறுகிறார், அரசின் நிதி வருவாயில் பாதிப் பணம் அரசு ஊழியர்களின் ஊதியத்திற்கே சென்றுவிடுகிறது என்று. திறமையான அரசாங்கம் தெளிவான திட்டங்களைத் தீட்டி அரசின் வருவாயைப் பெருக்கினால் ஊழியர்கள் வேண்டாம் என்றா கூறப்போகிறார்கள். ஆனால் அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் ஊதியத்துக்கான தொகையை செலவாக அரசுகள் நினைத்தால் அரசு அலுவலகங்களை இழுத்து மூடிவிட்டு அனைத்தையும் தனியார் கையில் கொடுத்துவிட வேண்டியதுதான். பிறகு மக்கள் நலம், மக்கள் சேவை, போன்றவை மறைந்து சாதி சான்றிதழுக்கும், இறப்பு சான்றிதழுக்கும், இருப்பிடச் சான்றிதழுக்கும் ஏழைகளும், பாழைகளும் சொர்க்கலோகம்தான் போக வேண்டியிருக்கும்.

முதல்வர் பழனிச்சாமிக்கு துர்வாசர் மந்திர ஆலோசனை வேறு கொடுக்கிறார். அதாவது அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து மிரட்டினால் அந்த மிரட்டலுக்கு பணிந்து விடக்கூடாது என்றும் பயப்படக் கூடாது என்றும் அரசுக்கு அறிவுரை வழங்குகிறார். யார் யாரெல்லாம் ஒரு முதல்வருக்கு அறிவுரை வழங்க வேண்டும் என்பதற்கு வரையறை இல்லாமல் போய்விட்டதாக நாங்கள் கூற மாட்டோம். ஏனென்றால் துர்வாசரே கூறிவிட்டார் நடப்பது பலவீனமான அரசு என்று. அரசுக்கு மந்திர ஆலோசனை சொல்லும் துர்வாசர்,

பொய்யுரைகளை வாக்குறுதிகளாக வாரி அள்ளி வீசிவிட்டு அவற்றை நிறைவேற்ற கேட்கப்போனால் புறம் போகும் அமைச்சர் பெருமக்களின் போக்குகளை என்ன செய்யலாம் என அறிவுரைத்தால் நல்லது.

அரசு ஊழியர் சங்கத்தை பொறுத்தவரை சம்பள உயர்வுக்காக மட்டும் போராடும் அமைப்பல்ல. தமிழகத்தில் வறட்சி மற்றும் கடன் தொல்லையால் இறந்து போன விவசாயிகளின் குழந்தைகள் கல்வி கற்பதற்கு கஷ்டப்படக்கூடாது என்பதுடன், அவர்களின் எதிர்காலம் பாடப்புத்தகங்களில் புதைந்து கிடப்பதால் அவர்களுக்கு உதவுவது சங்கத்தின் தலையாய கடமை என்று முடிவு செய்து அரசு ஊழியர்களிடம் உண்டியல் மூலம் வசூல் செய்து லட்சக்கணக்கான ரூபாயை நிதி உதவி வழங்கினோம்.

அதோடு மட்டுமின்றி, தமிழகத்தில் இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் வெள்ள பாதிப்பு, புயல் பாதிப்பு போன்ற இடர்களின்போது மக்களின் துயர் துடைக்கும் வகையில் பொருளுதவி, நிதியுதவி உள்ளிட்ட பணிகளில் முழு அர்ப்பணிப்பு உணர்வோடு தொடர்ந்து செய்துவரும் அமைப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்பதை மக்கள் அறிவர்.

துக்ளக் இதழிலிருந்து சமன் செய்து சீர் தூக்கும் கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம், சம்மணமிட்டு ஊர் வம்பு பேசும் கட்டுரைகளை அல்ல. அரசு ஊழியர் சங்கத்தின் மிரட்டல் கட்டுரையில் துர்வாசர் செய்திருப்பது வெறும் ஜன்னலிசம்தான். அவரை இனியாவது ஒழுங்காக ஜர்னலிசம் செய்யச் சொல்லுங்கள்.

என்றும் கனிவுடன்,

**(மு. அன்பரசு)**

பொதுச் செயலாளர்

❖

---

# பற்றற்ற நிலை பற்றி...

*ராஜாஜி முதல்வராக இருந்தபோது அரசு ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரிக்கையை வைத்தனர். அதற்கு முதல்வர் ராஜாஜியோ 'சிக்கன வாழ்வை மேற்கொள்ளுங்கள்... பற்றற்ற நிலையில் உங்கள் கடமையைச் செய்யுங்கள்' என்றார்.*

*அப்போதைய சட்டமன்றத்தில் அமரர் ஜீவாவோ 'பற்றற்ற' வாழ்க்கையைப் பற்றி...*

*'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை*
*பற்றுக பற்ற விடற்கு'*

*என திருக்குறளிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அரசாங்கத்தின் தலைவர் கோடிக்கணக்கான மகக்ளுக்கு வாழ வழி வகுத்துக் கொடுக்க வகையின்றி வறுமையாலே வாடி வழங்கும் தொழிலாளி வர்க்கத்தின் வருவாயைக் கூட்டிக் கொடுத்து அவர்கள் துன்பத்தைத் துடைக்க முன்வருவதற்கன்றி - நிலையற்ற ஒருஅவல நிலையிலே அல்லல்பட்டு திரியும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலையான வாழ்வை சிருஷ்டித்துக் கொடுப்பதற்குத் திறமையின்றி... "பஜகோவிந்தம் பாடுங்கள்... பஜனை செய்யுங்கள்... செயலைக் காட்டி வாயைக் கட்டி சப்தமின்றிப் பசியால் செத்துப் போங்கள் என்று சொல்வதா நியாயமானது?" என்று இடித்துரைத்தார்.*

*உழைப்பாளி மக்களுக்கு 'சிக்கனமாயிருங்கள் பற்றற்ற நிலையில் வாழுங்கள்' என்று ஊருக்கு மட்டும் உபதேசித்த கதை 1950களிலேயே ஆட்சியாளர்களால் அரங்கேற்றப்பட்டிருக்கிறது. ஆனால், அன்றும் என்றும் உழைக்கும் வர்க்க நலனுக்காக சட்டமன்ற, பாராளுமன்றத்தில் ஓங்கிக் குரல் கொடுத்தவர்கள், கொடுக்கிறவர்கள் கம்யூனிஸ்டுகளே என்பது வெள்ளிடைமலை.*

***- பெரணமல்லூர் சேகரன்***

# அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் சம்பளத்தை குறைக்கச் சொன்ன தனியரசு எம்.எல்.ஏ. மன்னிப்பு கேட்க வேண்டும்

நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானிய கோரிக்கையின்போது பேசிய தனியரசு எம்.எல்.ஏ., அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தினை குறைத்திட வேண்டும் என்றும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாத ஓய்வூதியத்தை ரூ.50 ஆயிரமாகவும், தற்போது சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மாத ஊதியத்தை ஒரு லட்சம் ரூபாயாகவும், மாவட்ட ஆட்சியர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

"நான் நல்லா இருக்கணும்னா நாலு பேர் நாசமா போறதுல தப்பில்லை" என்கிற ஒரிஜினல் அரசியல்வாதிக்கே உரிய ஸ்டைலில் பேசியிருக்கும் தனியரசு எம்.எல்.ஏ., அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளத்தை ஏன் குறைக்க வேண்டும் என்றோ, அவர் அப்படி கூறுவதற்கு என்ன காரணம் என்றோ விளக்கவில்லை. ஊதிய மாற்றத்தினை ஏற்படுத்தாமல் தமிழக அரசு காலம் கடத்தியும், பொய் வாக்குறுதிகள் அளித்து அதை செயல்படுத்தாமல் ஏமாற்றியும் வரும் நிலையில், இவரின் சிறுபிள்ளைத்தனமான பேச்சு சீரிய கண்டனத்திற்குரியதாகும். அதிமுகவின் ஊதுகுழல் எம்.எல்.ஏ.வாக இருக்கும் இவர் அதிமுக அரசை பாராட்ட வேண்டும் என்று நினைத்தாலோ, தனக்கு சம்பள உயர்வு வேண்டும் என்று எண்ணினாலோ அதை நேரடியாக கேட்டு பெற்றுக்கொள்வதில் யாருக்கும் ஆட்சேபனையில்லை. ஆனால் ஏற்கெனவே அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் 20 மாத காலமாக 8வது ஊதிய மாற்றத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் நிலையில் தனியரசு எம்.எல்.ஏ.வின் பேச்சு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்.

ஐந்து வருடங்கள் எம்.எல்.ஏ.வாக இருப்பவருக்கு ஆயுள் முழுவதும் ஓய்வூதியம் ரூ.50000/-ஆக மாதந்தோறும் உயர்த்திக் கேட்பதில் உள்ள நியாயங்களைவிட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களுக்கான ஊதியத்தை உயர்த்திக் கேட்பதில் உள்ள நியாயங்கள் ஆயிரம் மடங்காகும், கூவத்தூரில் கூடாரம் போட்டு எம்.எல்.ஏ. விடுதியில் சரணடைந்து, தொகுதி பக்கமே தலைகாட்டாத எம்.எல்.ஏ.க்களுக்கு மாத ஊதியம் ரூ.1,05,000/- ஆக உயர்த்தப்பட்டிருப்பது தனியரசு போன்ற எம்.எல்.ஏ.க்களின் மனசாட்சியை உறுத்தப் போவதில்லை என்பது அவர் பேசியிருக்கும் பேச்சிலிருந்தே தெரிகிறது. தொகுதி பக்கமே தலைகாட்டாத எம்.எல்.ஏ.க்களுக்கு இந்தச் சம்பளம் தேவையில்லை என தனியரசு பேசியிருந்தால் அவர் உண்மையான மக்கள் பிரதிநிதியாக தெரிந்திருப்பார்.

நாட்டில் பசி, பஞ்சம், பட்டினி, வறட்சி, விவசாயிகள் தற்கொலை, தண்ணீர் பிரச்சனை, விவசாயிகள் கடன்களை ரத்து செய்யக் கோரி போராட்டம் போன்றவற்றிற்கு நிதி ஒதுக்க முன்வராத அரசு, இந்த ஆட்சியில் இம்மியளவும் மக்கள் சேவையில் ஈடுபடாத, தொகுதி பக்கமே எட்டிப் பார்க்காத, முடங்கிப் போன அரசுக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கும் காரியத்தை மட்டுமே கவனிக்கும் எம்.எல்.ஏக்களின் சம்பளத்தையும், படிகளையும், ஓய்வூதியத்தையும் எந்தவித போராட்டமும் இன்றி, பரிந்துரையும் இன்றி ஏகபோகமாக உயர்த்தி இருப்பதன் மூலம் அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ பொதுமக்களோ எக்கேடு கெட்டுப் போங்கள் அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை, நாங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற அரசின் மனப்போக்கும், அதை ஆதரிக்கும் தனியரசு போன்ற எம்.எல்.ஏக்களின் பேச்சும் செய்கைகளும் கடும் கண்டனத்திற்குரியவை.

எந்தப் போராட்டம் நடத்தினாலும் அரசிடம் நிதியில்லை என கை விரிக்கும் அரசாங்கம், நாட்டு மக்கள் மீது உண்மையான அக்கறையும் விசுவாசமும் கொண்டிருந்தால் பஞ்சமும், வறட்சியும் தலைவிரித்தாடுவதாக பாதிக்கபட்ட மக்கள் திரள் போராடுகிறபோது ஓலமிடுகிற அரசு சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை ரூ.50000/-லிருந்து ரூ.105000/- ஆக உயர்த்தியிருப்பதிலிருந்து தன்னுடைய உண்மை முகத்தை நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறது.

எந்த அடிப்படையும் இல்லாமல், யாரோ எழுதிக் கொடுத்ததை சட்டமன்றத்தில் வாசித்துள்ள தனியரசு, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பளத்தை எந்தக் காரணமும் இன்றி குறைத்து வழங்கச் சொன்னதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிட்டால் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களுடன் சேர்ந்து தனியரசு போன்ற அரசின் கைத்தடி எம்.எல்.ஏ.க்களை மக்கள் மன்றத்தில் கண்டிப்பாக தண்டிப்பார்கள்.

**(மு. அன்பரசு)**
மாநில பொதுச் செயலாளர் ❖

# ஜாக்டோ-ஜியோ

## இயக்க நிகழ்வுகள்

மத்திய அரசின் 7-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு மாநில அரசால் அமைக்கப்பட்ட குழுவின் முடிவுகள் ஜூன் மாதம் அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இக்குழு தனது பரிந்துரையை அரசுக்கு அளித்திட மேலும் 3 மாதம் கால அவகாசம் கேட்டுள்ளது. இதற்கு கண்டனம் தெரிவித்தும், இக்குழு தனது பரிந்துரையை வழங்கி மாநில அரசு அமுல் படுத்துவதற்கு முன்னர் உடனடியாக 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும். ஏப்ரல் 2003-க்கு பிறகு அரசுப்பணியில் சேர்ந்த வர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி வருகிறது.

இக்கோரிக்கையை நிறைவேற்ற மாநில அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் 63 சங்கங்கள் இணைந்த ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பினர் 18.7.2017 அன்று மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர். அதன் ஒரு பகுதியாக...

### சென்னை

சேப்பாக்கம் வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஜாக்டோ-ஜியோவின் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சா.டானியல்ஜெய்சிங் தலைமையேற்றார். ஜாக்டோ-ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளரும், தலைமைச் செயலக சங்கத்தின் தலைவருமான ஜெ.கணேசன், அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் மு.அன்பரசு, தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்க நிறுவனத் ஆ.மாயவன், தமிழ்நாடு அரசு பணியாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் எம்.பொன்னிவளவன், தமிழ்நாடு உடற்பயிற்சி ஆசிரியர் இயக்குநர் சங்க மாநிலத் தலைவர் எஸ்.சங்கரபெருமாள், தமிழக தமிழாசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் முனைவர் ஜெ.கங்காதரன், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி எம்.மூர்த்தி, தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சங்க தலைமை நிலைய செயலாளர் எம்.ஜி.தயாளன், தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்டத் தலைவர் ஆர்.பெருமாள்சாமி, தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் க.சாந்தகுமார், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில செயலாளர் ப.உதயகுமார், தமிழ்நாடு ஆசிரியர் சங்க மாநிலத் தலைவர் பி.கே.இளமாறன் ஆகியோர் போராட்ட விளக்கவுரையாற்றினர். தலைமைச் செயலக சங்கச் செயலாளர் கு.வெங்கடேசன் நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 5000க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

### கடலூர்

கடலூரில் பழைய ஆட்சியர் அலுவலகம் முன்பு செவ்வாய்க்கிழமை மாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலர் எல்.அரிகிருஷ்ணன் தலைமை வகித்தார். தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்கம் மாவட்டத் தலைவர் ஆர்.எல்லப்பன், தமிழ்நாடு அரசு பணியாளர் சங்க மாநில பிரசார செயல் என்.சுந்தரராஜா, தமிழக தொடக்க நடுநிலைப் பள்ளி ஆசிரியர் சங்கம் மாவட்ட செயலர் உத்த.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பல்வேறு சங்கங்களின் மாநில நிர்வாகிகள் வே.மணிவாசகம், பி.நல்லத்தம்பி, பி.முருகேசன், கோ.பாக்கியராஜ், பி.எஸ்.அப்பர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டப் பொருளர் டி.ரவிச்சந்திரன் நன்றி கூறினார். இப்போராட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்

### திருவள்ளூர்

திருவள்ளூரில் மீரா திரையரங்கம் அருகில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள் கழக மாவட்ட செயலாளர் எஸ்.ஞானசேகரன், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட தலைவர் கே.பாஸ்கர்,

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜி.இளங்கோவன்,தலைமை நிலைய செயலாளர் ஜி.முத்துக்குமார் ஆகியோர் தலைமை தாங்கினார்.

இதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் டி.கலைசெல்வி,மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச் செயலாளர் இரா.தாஸ், தமிழ்நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம் மாநில பொருளாளர் எம்.ஜம்பு தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கழக மாநில தலைவர் ஆ.சீனிவாசன்,உட்பட பலர் பேசினர். இதில் 64 துறை வாரிய சங்கங்களை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நாகப்பட்டினம்

மாவட்ட ஆட்சியரகத்தின் முன்பு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், அரசுப் பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் நாகை கே.செல்வன், தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாவட்டச் செயலாளர் பா.இரவி மற்றும் உயர்நிலை மேல்நிலை பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டச் செயலாளர் த.லீலாவதி (நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ) தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எம்.காந்தி, தமிழக ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் க.மணிமாறன், உயர்நிலை மேல்நிலை தலைமை ஆசிரியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.முருகன், தமிழக தமிழாசிரியர் கழக மாவட்டச் செயலாளர் தா.சிவகுருநாதன், பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டச் செயலாளர் வி.சதீஸ்குமார், பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்டத் தலைவர் மு.பரஞ்சோதி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத் தலைவர் மு.ஞானசேகரன், உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத் தலைவர் ப.சரவணன், மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் சங்க மாவட்டச் செயலாளர் எம்.செல்வராஜ், தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாவட்டத் தலைவர் ஜெக.மாணிக்கவாசகம், தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எம்.கணேசன், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் ப.பார்த்தசாரதி, ஆசிரியர் முன்னேற்றச் சங்க மாவட்டச் செயலாளர் பி.ஸ்டாலின், மேல்நிலை பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் பி.ரவி, உடற்கல்வி ஆசிரியர் இயக்குனர் கழக மாவட்டத் தலைவர் ஆர்.செல்வகணேசன், அரசுப் பணி யாளர் சங்க மாவட்டத் தலைவர் வை.நாகராஜன், அரசு ஊழியர் சங்க மாவட்டப் பொருளாளர் பா.ராணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநில சிறப்பு அழைப்பாளர்களாக புள்ளி யியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் ப.அந்துவன் சேரல், தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொருளாளர் அம்பை.ஆ.கணேசன், அரசுப் பணியாளர் சங்க மாநில பொதுச்செயலாளர் க.அறவாழி, உயர்நிலை மேல்நிலைபட்டதாரி ஆசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் நா.அசோக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

### புதுக்கோட்டை

புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் கி.நாகராஜன், தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் கு.திராவிடச்செல்வம், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் ஆ.செல்லத்துரை ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன், தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் சாமி.சத்தியமூர்த்தி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளர் ந.ரெங்கராஜன், ஜாக்டோ-ஜியோ பொதுக்குழு உறுப்பினர் ஆ.மதலைமுத்து ஆகியோர் சிறப்புரையாற்றினர். பல்வேறு சங்கங்களின் மாவட்ட நிர்வாகிகள் அ.மணவாளன், க.கருப்பையா, ஆர்.ரெங்கசாமி, கணேசன், கனகமுத்து, வின்சென்ட் சண்முக நாதன் உள்ளிட்ட இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

### திருவாரூர்

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.துரை ராஜ், பி.ஆர்.ரவி, வெ.சோமசுந்தரம் மற்றும் ஆர்.சத்தியமூர்த்தி ஆகியோர் தலைமையில்

நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ஜி.பைரவ நாதன், தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற துணைப் பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன், தமிழக தமிழாசிரியர் சங்க மாநிலத் தலைவர் ச.மருதவாணன் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணி யாளர் சங்க மாநில துணைத் தலைவர் எஸ்.அரவிந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

தோழமை சங்க நிர்வாகிகள் குரு.செல்வமணி, எஸ்.ஆர்.கருணாநிதி, ஈஸ்வர், இரா.மணி வண்ணன், ப.பாரதி, ந.செந்தமிழ்செல்வன், கோ.வீரமணி, எஸ்.தியாகராஜன், இரா.பால சுப்பிரமணியன், சு.ராஜேந்திரன், வேலாயுதம், ஆர்.ஆன்ட்ரூஸ், வி.ராஜசேகரன், பூ.சிவராஜ் மற்றும் பா.பஞ்சாபிகேசன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பி.ஆர்.ரவி நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் 1050 பெண்கள் உள்பட 3550 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரை

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர் எம்.முருகன் தலைமையில் நடைபெற்றது. சுப்பையன், நாகராஜன், சந்திரன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்து நடத்தினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் முனைவர் சு.கிருஷ்ணன், பாண்டியம்மாள் உள்ளிட்ட ஜியோ நிர்வாகிகளும், ஜாக்டோ நிர்வாகிகளும் உரையாற்றினர். அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் எம்.சுப்பிரமணியன், முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாநிலத் தலைவர் கே.ஓ.பி.சுரேஷ் உள்ளிட்ட மாநிலத் தலைவர் உரையாற்றினர். இதில் 5000 அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

### நீலகிரி

மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஆஸரா, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் ஜெயசீலன் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் செ.சரவணன் துவக்கவுரையாற்றினார். இதர சங்கங்களை சேர்ந்த குமாரராஜா, ஜி.வேல்முருகன், வாலண்டினா, வில்லியம்ஸ், சுப்ரமணி, ஏ.சரவணன், மணிகண்டன், பார்த்தசாரதி ஆகியோர் கண்டன உரையாற்றினார். வேளாண்மைத் துறையின் மாநில பொதுச் செயலாளர் கி.முத்துக்குமார் நிறைவுரையாற்றினார். சிவதாசன் நன்றி கூறினார். இதில் 612 பெண்கள் 393 ஆண்கள் கலந்து கொண்டனர்.

**கூடலூரில்** நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சலீம், அன்பழகன் ஆகியோர் தலைமை யேற்றனர். இதர சங்கங்களை சேர்ந்த சுனில்குமார், ஆனந்தி, விஜயா, பரமேஸ்வரி, முருகேசன், சுரேந்தர், வர்கீஸ் ஆகியோர் கண்டன உரையாற்றி னார். ராஜ்கமல் நன்றி கூறினார். இதில் 425 ஆண்களும், 410 பெண்களும் பங்கேற்றனர். ❖

## பணி நிறைவு வாழ்த்துக்கள்

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத் தலைவரும், மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளருமான கே.எம்.தியாகராஜன் (நிர்வாக அலுவலர், கஸ்தூரிபாய் மருத்துவமனை) பணி ஓய்வு பாராட்டுக் கூட்டம் 31.07.2017 அன்று கஸ்லூரிபாய் மருத்துவமனை கூட்ட அரங்கில் நடைபெற்றது. தென் சென்னை மாவட்டத் தலைவர் சா.டேனியல் ஜெய்சிங், பொருளாளர் பா.புகழேந்தி, துணைத் தலைவர் கி.ரகுராமன், பொதுப் பணித் துறை கணக்கு மற்றும் ஆட்சியர் பணி அலுவலர் சங்க சா.ஆண்டியப்பன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். நிறைவாக அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு சிறப்புரையாற்றினார். கே.எம்.தியாகராஜன் ஏற்புரையாற்றினார். இந்நிகழ்வில் 35 பெண் ஊழியர்கள் உட்பட 150 பேர் கலந்து கொண்டனர்.**



**ஓய்வு காலத்திலும் அவருடைய சமூகப் பணி தொடர தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

**இரத்த தானம்**
**செய்வோம்**

**உயிர்களைக்**
**காப்போம்**

# ஆர்.எம்.எஸ்.

ஆர்.எம்.எஸ்.
மூன்றெழுத்தின் உச்சரிப்பில்
தோன்றும் நம்பிக்கையே தனி
என்று காண்போ மினி

இயக்கமே வாழ்வானது
வாழ்வே இயக்கமானது
தாழ்வே அறியாதது
உயர்வே அமைவதானது

சர்வதேச தேச மாநிலம்
சர்வமும் சிதையாமல் உரைப்பாய்
ஆர்வமுடன் கேட்டு
கர்வம் கொள்வோம் யாம்

நாடி நரம்பு புடைக்க
நாடாள்வோரின் நாடகம் உடைக்கும்
நாக்கில் நீ உச்சரிப்பவை
நோக்கின் அவை எச்சரிக்கை

இமயம் முதல் குமரி வரை
இமயமாய் எழுந்த நீ
இமை மூடி விழுந்தாய்
எமை துயரில் தோய்த்தாய்

இறந்தபின் மறப்பேனென
இருக்கும்போதே உரைத்தாய்
சிறக்கும்படி உடலையே ஈந்தாய்
மறக்காதபடி மனதில் அமர்ந்தாய்

வெள்ளுடை எனில் ஆர்.எம்.எஸ்.
கொள்ளைகொள் உரைவீச்சுக்கு ஆர்.எம்.எஸ்.
பள்ளத்திலிருப்போரைத் தூக்கிவிடும் ஆர்.எம்.எஸ்.
வெள்ள மக்கள் திரளில் ஆர்.எம்.எஸ்.

கோடிக்கரங்களின் வீரவணக்கம்
நாடிநரம்புகளில் உம்பெயர்இருக்கும்
வேடிக்கை மனிதராய் வீழாமல்
கோடிக்கால் பூதமாய் வாழ்வாய்

போய்வா தோழா புன்னகையுடன்
நோய்வாய் மானுட விடுதலைக்கு
தீர்வாய் நீ காட்டிய பாதையில்
நேர்நின்று தொடரும் எம்பயணம்

- **பெரணமல்லூர் சேகரன்**

# வாசகர் கடிதம்

ஜுலை 2017ன் அட்டைபடங்கள், விடுதலையும் சுதந்திரமும், ஜி.எஸ்.டி. கார்ட்டூன் மற்றும் கட்டுரை அனைத்தும் அருமை. அரசு ஊழியர்களையே பொய்சொல்லி ஏமாற்றுகிறதே அரசு. பசி வந்தால் பத்தும் பறந்து போகும், மணல் எடுத்து மலை உடைத்து அடிப்படை அனைத்தும் மறந்து போனதால் உணவு பஞ்சம் இப்போது. விவசாயம், மீன்பிடி போன்ற அனைத்தும் கார்ப்பரேட் கையில் கொடுத்து நாம் வரிசையில் நின்று பிச்சை எடுக்க வேண்டும் என்பதே அரசின் எண்ணம். தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்றான் பாரதி. ஒரு விவசாயி பட்டினியால் இருந்தாலும் அந்த நாடு அழிவை நோக்கித்தான் போகும் ஆனால் இங்கு விவசாயி இறந்தே போகிறான். மணல் கொள்ளைக்கு யார் காரணமோ அவர்களே தான் அரசு பள்ளிகளுக்கும் காரணம். வர வர நீதிபதிகள் தங்களை மன்னராகவே கருதுகிறார்கள். நாம் சுதந்திரம் அடைந்ததாக சொல்லும் மாதம் ஆகஸ்ட். நிச்சயமாக நாம் கூட்டமைப்பாக செயல்பட்டு வரும் ஆகஸ்ட் 5ல் சுதந்திம் பெற்று 2017 ஐ வரலாற்றில் பதிவிடுவோம்.

- **சி. பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்.

கடந்த இதழில் மாநில அளவிலான பயிற்சி வகுப்பு பட்டறை செய்தி மிகவும் அபாரமாக இருந்தது. தலையங்கம், பொதுச் செயலாளர் மேசையிலிருந்து மற்றும் பிரச்சனை மாடோ மாமிசமோ அல்ல மதவெறி கட்டுரை படித்தேன். மிகவும் சிறப்பாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

## படித்ததில் பிடித்தது

திரிபுரா மாநிலத்தில் அரசு ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும், மத்திய அரசின் 7வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 19.67 சதவீத ஊதிய உயர்வினை அம்மாநில இடது முன்னணி அரசு அறிவித்துள்ளது. பணிக்கொடை 4 லட்சம் ரூபாய் என்பதிலிருந்து 10 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

*(தீக்கதிர், 19.6.2017)*

தொகுப்பு : **மு.சலீம் முகம்மது மீரான்**, தென்காசி

# நீதியே விதியை மீறினால் நியாயங்கள் நிலைப்பது எப்படி?

நீதித்துறையில் எவ்வளவோ முன்னேற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே வந்தாலும் பிரிட்டிஷ் காலத்திலிருந்து புரையோடிப்போயுள்ள அடிமைத் தனத்தை எத்தனை போராட்டம் நடத்தியும் நீக்க முடியவில்லை. அடிமைத்தனம் உயிரோட்டமாக வைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகமாக நிதித்துறை இன்றும் பிறதுறையினராலும், சமூக ஆர்வலர் களாலும் விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில் நீதித் துறையினர் எஜமானர்களாக இருக்கும் நீதிபதிகள் அந்தக்கரையை நீக்க அக்கறை செலுத்தாமல் அதை தொடர விட்டிருப்பது ஆச்சர்யமும் அதிர்ச்சியும் அளிக்கும் விஷயமாகும்.

நீதித்துறையில் அலுவலக உதவியாளர்களாக உள்ளவர்கள் நீதிபதியின் வீடுகளில் பணிசெய்ய பணிக்கப்படுவதும் அங்கு அவர்கள் நடத்தப்படும் விதம் என்பது மனித உரிமைகளை மீறிய செயலாக உள்ளதாக நீதித்துறை ஊழியர் சங்கம் அவ்வப்போது போராட்டங்கள் மூலமாகவும், கோரிக்கை மனுக்கள் வாயிலாகவும் உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு தொடர்ந்து கொண்டு சென்றும் இதுவரையில் நடவடிக்கைகள் என்னவோ பூஜ்யமாகத்தான் உள்ளது. மீன்குழம்பு வைக்கத்தெரியாத அடிப்படை ஊழியருக்கு மெமோவும், நீதிபதியின் உள்ளாடையை துவைக்க மறுத்த பெண் அலுவலக உதவியாளருக்கு டிரான்ஸ்பரும், மாதாந்திர வயிற்றுவலியால் தாமதமாக வேலைக்கு வந்த ஊழியருக்கு அபராதமும் தான் நீதித்துறையில் நியாயமான விஷயங்களுக்கு கிடைத்திருக்கும் பரிசுகள். இதன்மூலம் நிதிபதிகளின் வீடுகளில் வீட்டுவேலைகள் செய்ய மறுக்கும் அடிப்படை ஊழியர்களுக்கு மறைமுக எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவர்கள் அடிமைகளாக நடத்தப்படும் நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையின் வெளிப்பாடுதான் சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.1 ஆக இருக்கும் தீபா அவர்களுடைய வீட்டில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த சந்திரசேகரின் மரணம்.

சந்திரசேகர், சிவகங்கை நிதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளர். அவர் நீதிதுறை நடுவர் தீபா அவர்களின் வீட்டுப் பணிகளை யும் செய்து வந்தார். அவருக்கு கார் ஓட்டத் தெரியும் என்ற விஷயமும் அவரிடம் அதற்கான ஓட்டுநர் உரிமம் இருந்ததும் நடுவருக்கு வசதியாகப் போனது. தன் கணவர், உறவினர்கள் எங்காவது வெளியில் செல்ல வேண்டுமென்றால் சந்திரசேகரிடம் காரில் அழைத்துச் சென்றுவர பணிப்பார். நடுவர் வீட்டில் வீட்டுவேலைகளுடன் மனஅழுத்தத்தில் கார் ஓட்டும் வேலையும் செய்துள்ளார் சந்திரசேகர். 11.3.2017ம் தேதி நடுவர் தீபா பணித்ததன் பேரில் அவருடைய கணவர் ராம்பிரசாத்தை திருக்கோஸ்டியூர் கோவிலுக்கு காரில் அழைத்துச் சென்றுள்ளார். நடுவரின் கணவருடன் ஓய்வு பெற்ற ஊழியர் மலைச்சாமி என்பவரும் சிவகங்கை டவுன் காவல் நிலைய காவலர் பாண்டித்துரையும் சென்றுள்ளனர். கோவிலுக்கு செல்லும் வழியில் கார் விபத்தில் சிக்கி சந்திரசேகருக்கு தலையில் அடிபட்டுள்ளது. அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் அவர் இறந்து விட்டார். காரில் சென்ற மற்றவர்களுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் வெட்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் விபத்து நடந்த கார் உரிய வாகன காப்பீடு இன்றி இருந்துள்ளது என்பதாகும். ஒரு நீதிபதியின் வீட்டில் உபயோகப்படுத்தப்படும் கார் உரிய வாகன காப்பீடு இன்றி இருப்பது என்பது வேலியே பயிரை மேய்வதற்கு ஒப்பாகும். ஊருக் கெல்லாம் நீதி சொல்லும் நீதிபதிக்கு காப்பீடு செய்யப்படாத காரை பயன்படுத்தக்கூடாது என்பது



இறந்து போன சந்திரசேகர்
அவருடைய மனைவி மற்றும் குழந்தைகள்

தெரியாதா என்ன? ஆனால் நம்மை யார் கேட்கப் போகிறார்கள் என்ற அதிகாரப் போக்குதான் ஊழியர் களை அடிமைகளாகப் நடத்துவதிலிருந்து உரிய காப்பீடு இல்லாமல் காரை உபயோகப்படுத்துவது வரை தொடர்கிறது. காப்பீடு இல்லாத காரின்மீது காவல்துறை, நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அதேபோல் தன் குடும்பத்திற்காக காரை ஓட்டி மரணித்த சந்திரசேகரின் மனைவியும் இரு சிறு குழந்தைகளும் ஆதரவின்றி நிர்கதியாக நிற்கும் நிலையில் அந்த குடும்பத்திற்கு குடும்பத்தின் நிலை கருதி கௌரவமான நிதியுதவி செய்யக்கூட முன் வராமல் இருக்கும் நடுவர் தீபாவின் நடவடிக்கை மனிதாபிமானமற்ற செயல் மட்டுமல்ல, கண்டிக்கத் தக்கதுமாகும். சிவகங்கை மாவட்ட நீதித்துறை ஊழியர் சங்கத்தின் சார்பில் இது குறித்து அந்த மாவட்டத்தின் இலாக்கா நீதியரசர்கள் திரு.பி.என். பிரகாஷ் மற்றும் திரு.என்.சேஷசாயி ஆகியோரிடம் நேரடியாக மனு அளிக்கப்பட்டுள்ளது.

அலுவலக உதவியாளரை ஓட்டுநராக பணிய மர்த்தி உபயோகித்தமைக்காகவும், வாகன காப்பீடு செய்யப்படாத காரை ஓட்டச்சொல்லி சந்திரசேகரை பணித்தமைக்காகவும், சட்டவிதிமுறைகளை கடைபிடித்து மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய நீதித்துறை நடுவரே தன் குடும்பத்தினர் பயன்படுத்தும் காருக்கு உரிய வாகன காப்பீடு இல்லாமல் வாகனத்தை பயன்படுத்தி நீதித்துறைக்கு களங்கம் ஏற்படுத்தியமைக்காகவும், இறந்துபோன சந்திரசேகர் உரிய மோட்டார் வாகன இழப்பீடு வாங்க இயலாமல் போனதற்கு தார்மீக பொறுப்பேற்று அவரின் குடும்பத்திற்கு உரிய நஷ்டஈட்டை நடுவர் தீபா வழங்க வேண்டியும் உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாநில மையம் மேற்கொண்டுள்ளது. சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதியரசரையும், சிவகங்கை மாவட்டத்தின் இலாக்கா நீதியரசர்களையும் நேரில் சந்தித்து நீதித்துறையின் மாண்புக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ள நடுவர் தீபா மீது உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ள மாநில மையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இறந்த சந்திரசேகர் குடும்பத்திற்கு நடுவர் தீபா உரிய நஷ்டஈடு வழங்காவிடில் தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம் மாநிலம் தழுவிய போராட் டம் நடத்தி உரிய இழப்பீட்டை பெற்றுத்தரவும் உறுதி பூண்டுள்ளது.

**- பி. கருணாகரன்**
மாநில தலைவர்
தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம்

## கூலி கேட்காமல் தாலி கட்டுங்கள்!

*இளைஞர்களே!*
*புலனத்தில் புதைந்து கிடந்தது போதும்!*
*முகநூலில் மூழ்கிக் கிடந்தது போதும்!*
*வலையொளியில் நாள்தோறும்*
*வலம் வந்தது போதும்!*
*பானையில் சோறில்லை!*
*ஏர் உழ கரிசல் மண் இல்லை!*
*அடுக்குமாடி குடியிருப்புகளாய்*
*மாறிநிற்கும் விவசாயநிலங்கள்!*
*பல நூற்றாண்டுகளை கடந்தும்*
*தீராத எல்லை பிரச்சனை!*
*அன்று ஆங்கிலேயர்*
*சுரண்டலுக்கு ஆளானோம்!*
*இன்று அரசியல்வாதிகளின்*
*சுரண்டலுக்கு ஆளாகின்றோம்!*
*புதிராய் கிடக்கும் பல கேள்விகள்!*
*பதிலாய் தொடங்கட்டும்*
*உங்களின் வேள்விகள்!*
*கைகோர்த்து எழுந்து நில்!*
*சதிகளை உடைத்தெறிவோம்*
*என உறக்கச் சொல்!*
*சீரழிந்துவரும் சமுதாயத்தைசீர் தூக்கு!*
*அரசியல் செய்து அறம் அறுப்பவனை*
*கேள்விக் கனைகளால் தாக்கு!*
*செவ்வாய் கிரகத்திற்கு செயற்கைகோள்களை*
*அனுப்பினால் போதாது*
*நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் என*
*பஞ்சபூதமும் மாசுஅடைந்து கிடக்கும்*
*இப்பூமியை புனிதமாக்கு*
*கரிகாலன் கல்லணை கட்டினான்!*
*இராசராச சோழன்*
*தஞ்சை பெரிய கோவிலை கட்டினான்!*
*இளைஞர்களே!*
*கூலியின்றி தாலியாவது கட்டுங்கள்.*

- **க.ரேவதி**, சென்னை

### நிதர்சனம்

**காட்டில் வேலை**
**செய்பவனை கேவலமாகவும்**
**கணினியில் வேலை**
**செய்பவனை கௌரவமாகவும்**
**நினைப்பவர்களுக்கு தெரியவில்லை,**
**அரிசியை இண்டர்நெட்டில்**
**டவுன்லோடு**
**செய்ய முடியாது என்று!**

# சுதந்திர நாட்டின் அடிமைகள்!?

- மதுரை நா.ஜெயராமன்

அந்நிய ஆட்சியின்போது அரசு ஊழியர்கள் மீது பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அந்நிய சுரண்டலின் அந்தரங்க ரகசியங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக அவன் வாய்க்கு பூட்டு போடப்பட்டது. அவன் அவயங்களுக்கு விலங்கிடப்பட்டது.

8.7.1875-ல் அரசு ஊழியர்கள் பத்திரிகையில் எழுதுவதை தடை செய்தும், 1888-ல் இந்திய தேசிய காங்கிரசுக்கு நிதி அளிப்பதை தடை செய்தும், 1896-ல் பொது இடங்களில் அரசின் கொள்கைகளை விமர்சிக்கக் கூடாது என்றும், எழுதக் கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களுக்கு காங்கிரஸ் தலைவர்கள் பாராட்டுக் கூட்டங்களை நடத்தி பரிசளித்தனர். இதனை தடை செய்ய 1899-ல் உத்தரவு பிறப்பிக் கப்பட்டது. அரசு ஊழியர்கள் வரவேற்பு மற்றும் பாராட்டுக் கூட்டங்களில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டது.

படிப்படியாக அரசு ஊழியரின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு விட்டன. அவர்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத் துரிமை, அரசியல் உரிமை, தொழிற் சங்க உரிமை அனைத்தும் பறிக்கப்பட்டு அவர்கள் நடைபிண மாக்கப்பட்டனர்.

நாடு விடுதலை அடைந்து சுதந்திர காற்றை சுவாசிக்க கனாக் கண்ட அரசு ஊழியர்கள் ஏமாற்ற மடைந்தனர். அரசு ஊழியர்களின் அடிப்படை உரிமைகளைப் பொறுத்த வரையில் வெள்ளை ஏகாதிபத்தியத்துக்கும், சுதந்திர பாரதத்துக்கும் பெருத்த வேறுபாடுகள் ஏதும் இல்லை. வெள்ளையன் அரசு ஊழியர்களுக்கு பூட்டிய விலங்குகள் சுதந்திர ஆட்சியிலும் அகற்றப்பட வில்லை. புதிய அரசு நடத்தை விதிகள் போன்ற புதிய விலங்குகளை பூட்டியது.

அரசு ஊழியர்களின் அடிப்படை உரிமைகளை உயர்த்திப் பிடிக்கும் தீர்ப்புகள் பல வெளிவந் துள்ளன. ஆனால், அந்த தீர்ப்புகளின்படி விதிமுறைகளில் திருத்தம் செய்யப்படவில்லை. வேலை நிறுத்தம் செய்வது தொழிலாளர்களின் உரிமை என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

"தொழிலாளர்கள் அவர்களுடைய போராட் டத்தை ஒரு வேலை நிறுத்தம் மூலம் தொடர்வது அவர்களுடைய அடிப்படை உரிமையாகும். வன்முறையிலோ, சட்டம்-ஒழுங்கு பிரச்சினை யிலோ ஈடுபடாத வரைக்கும் நீதிமன்றம் இதில் தலையிட முடியாது".

### உண்ணாவிரதம் பற்றிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

உண்ணாவிரதம் இருந்த தொழிலாளர்கள் மீது பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாக வழக்கு போடப்பட்டது. இதன் மீது உச்ச நீதிமன்றம் கீழ்க்கண்டபடி தீர்ப்பளித்தது:

"உண்ணாவிரதம் என்பது நமது நாட்டில் அமைதியான முறையில் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வழியாகும். அதை பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்துவதாகக் கூறுவது சரியல்ல".

### அரசு ஊழியர்களின் அடிப்படை உரிமைகள்

"இந்தியா ஒரு போலீஸ் ஆட்சியல்ல. அது ஒரு ஜனநாயக நாடு. அதன் குடிமக்கள் அனை வருக்கும் சுயமாக சிந்திக்கும் உரிமை, அதனை வெளிப்படுத்தும் உரிமை, நம்பிக்கை, வழிபாடு, சரிநிகர் சமானம், வாய்ப்புகளில் சமநிலை, சகோதர மனப்பான்மை, மனிதனின் உயர்வு நிலை ஆகியவை மதிக்கப்பட வேண்டும். இது உறுதியான முடிவு என்று நாம் நம்புவோமாக. இது வரலாற்றில் மறந்து விடக்கூடிய ஒன்றல்ல. இந்த முடிவு இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளின் அடிப்படை உரிமைப் பிரிவில் எழுதப்பட் டுள்ளது. அது தான் இந்தியாவை ஒரு ஜனநாயக குடியரசாக்குகிறது. இந்தியாவை சர்வாதிகார மற்றும் போலீஸ் ஆட்சியிலிருந்து வேறுபடுத்து கிறது".

"பேச்சுரிமை, அதனை வெளிப்படுத்தும் எழுத்துரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, அமைதியாக ஆயுதமின்றி கூடும் உரிமை, சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் என்ற உரிமை, சட்டத்தின் முன்பு அனைவருக்கும் சமமான பாதுகாப்பு, அரசு பணியமைப்பில், நியமனங்களில், சமமான வாய்ப்பு என்ற உரிமை அனைத்தும் அடிப்படை உரிமையாகும்.

அரசு ஊழியர்களின் அடிப்படை உரிமைகளின் மீது ஏற்பட்டுத்தப்பட்டுள்ள பல்வேறு தடைகளை அவர்களும், இந்திய குடிமக்கள் என்பதை கருத்திற்கொண்டு அகற்ற வேண்டும். அரசு ஊழி யர்களின் கை, கால்களை சங்கிலியால் பிணைத் திருக்கும் அடிமை விதிகள் (நடத்தை விதிகள்) மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். ❖

# தோழர் இரா. முத்துசுந்தரம் – காலத்தை வென்ற போராளி

இந்தியா முழுமையுமுள்ள அனைத்து மாநில அரசு ஊழியர்-ஆசிரியர்களாலும் குறிப்பாக தமிழக அரசு ஊழியர்களாலும் அன்போடு ஆர்.எம்.எஸ். என அழைக்கப்படும் தோழர் இரா,முத்துசுந்தரம் தனது 65 ஆண்டுகால வாழ்வில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக அரசு ஊழியர்கள் நலன், அகில இந்திய அளவில் அனைத்து மாநில அரசு ஊழியர்கள் நலன் மட்டுமன்றி இந்திய உழைப்பாளிகளின் நலன்களுக்கான போராட்டத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டவர்,

மதுரை மாவட்டம் சமயநல்லூரில் ஒரு சாதாரண குடும்பத்தில் ஆகஸ்ட் 10, 1952 ல் பிறந்த தோழர் ஆர்.எம்.எஸ். குடும்ப சூழல் காரணமாக புகுமுகக் கல்லூரி வரையே கல்வி கற்க முடிந்தது. தமிழக அரசின் கல்வித் துறையில் அமைச்சுப் பணியாளராக தமது அரசுப் பணியினை 1969ல் தாளவாடியில் துவக்கியவர் கடந்த 2010ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கல்வி அலுவலரின் தனி அலுவலராக ஓய்வு பெற்றார்,

தனது பணிக்காலம் துவங்கிய நாள் முதல் அரசு ஊழியர்களின் நலன் காக்க உறுதிபூண்டு சங்கப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அன்றைய சங்கத் தலைமை ஆளும் கட்சியின் அடிவருடியாய் மாறி ஊழியர் நலனை காவு கொடுத்த நிலையில் சங்கத்திற்குள்ளேயே நடவடிக்கைக் குழு என்ற பெயரில் உருவான போராட்டத் தலைவர்களுள் ஒருவராக தம் இளவயதிலேயே தலைமைப் பொறுப்புக்கு வந்தவர், பின்னர் அரசு ஊழியர்களின் போராட்ட உணர்வுகளுக்கு தலைமையேற்று வழிநடத்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 06.05.1984ல் உருவானபோது தமது 32வது வயதில் மாநில செயலாளர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்நாள் தொட்டு பணிஓய்வு பெறும் வரை 25 ஆண்டு காலம் மாநில நிருவாகியாகவும், 2002 முதல் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து, அரசு ஊழியர் சங்கத்தினை திறம்பட வழிநடத்தியதுடன் சங்கத்தின் ஒப்பற்ற தலைவர் என அனைத்து ஊழியர்களாலும் பாராட்டப் பெற்றவர்,

அதேபோல 24 மாநிலங்களில் உள்ள 28க்கும் மேற்பட்ட மாநில அரசு ஊழியர் சங்கங்கள் அங்கம் வகிக்கும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் செயலாளராக, உதவி பொதுச் செயலாளராக 2002 முதல் பொறுப்பு வகித்த தோழர் ஆர்.எம்.எஸ். 2009ம் ஆண்டு திருவனந்தபுரம் நகரில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டில் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக தேர்வு பெற்றார், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அனைத்து மாநில அரசு ஊழியர் இயக்கங்களுக்கும் திறம்பட வழிகாட்டியதுடன், புதிய ஓய்வூதியத் திட்டம் என்ற பெயரால் ஊழியர்களின் ஓய்வூதியம் பறிக்கப்பட்ட நிலையில் அதற்கெதிரான தத்துவார்த்த/களப் போராட்டங்களை அகில இந்திய அளவில் ஒருங்கிணைத்ததும், வழிகாட்டியதும் தோழரின் தலைமை ஆற்றலுக்கு சான்றாக அனைத்து மாநிலத் தலைவர்களாலும் போற்றப்பட்டது,

கடந்த அகில இந்திய மாநாட்டில் சம்மேளனத்தின் அகில இந்தியத் தலைவராக தேர்வு பெறும்போதே தோழரின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தும், இந்திய உழைப்பாளி மக்களுக்கான போரில் தனது உடல்நலனையும் பொருட்படுத்தாமல் அரும் பணியாற்றினார். கடந்த 2016, செப்டம்பர் 2 அன்று நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தத்தில் 20 கோடி பேர் பங்கேற்றனர், இந்த போராட்டம் வெற்றிகரமாக அமைய உடல்நலம் குன்றியிருந்த நிலையிலும் 9 மாநிலங்களுக்கு தொடர் வண்டியிலேயே பிரயாணித்து ஊழியர்களுக்கு போராட்ட உணர்வை ஊட்டியது வரலாற்றில் என்றென்றும் நினைவுகூறத் தக்கதாகும்.

புதுமுகவகுப்பு வரை மட்டுமே படித்திருந்தாலும் தோழர் பன்மொழியில் சொற்பொழிவாற்றும் ஆற்றல் பெற்றிருந்தார், தமிழில் மிகச்சிறந்த பேச்சாளரான தோழர் ஆர்.எம்.எஸ். தொழிற்சங்க மேடைகளில் தமிழ் இலக்கியங்களிலிருந்தும், இதிகாசங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி இலக்கிய மேடையாக மாற்றியவர். கேட்போரின் நாடிநரம்புகளை முறுக்கேறச் செய்யும் மொழி நடையும் சிம்மக் குரலும் அவருக்கே உரித்தானதாகும். பிற மாநிலங்களில் உரையாற்றுகையில் தெளிந்த ஆங்கிலத்தில் ஆற்றலுடன் பேசுவதும் மாநில மொழியினை தகுந்த இடத்தில் கையாண்டு கேட்போரை

தன்வயப்படுத்துவதும் தோழரின் மொழியாற்றலுக்கு சான்றாகும், தமது இறுதிக் காலங்களில், இந்தி பேசும் வடமாநில ஊழியர்களிடையே இந்தியிலேயே சொற்பொழிவாற்றும் ஆற்றலையும் பெற்றார்.

தமிழக, இந்திய உழைப்பாளிகளின் நலன்களுக்காக இடையறாது போராடிய தோழர் சர்வதேச அரங்குகளிலும் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக குரல் கொடுத்தவர், இந்திய உழைப்பாளி மக்களை பிரதிநிதத்துவப்படுத்தி இலங்கை,நேபாளம், கிரேக்கம், ஆஸ்திரேலியா, பிரேஸில், தென்ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் நடைபெற்ற உலக தொழிலாளர் ஸ்தாபனத்தின் மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் பங்கேற்று தமக்கே உரிய பாணியில் மிக ஆழ்ந்த கருத்துக்களை எடுத்து வைத்துள்ளார்,

இத்துணை சிறப்புகள் இருப்பினும், சுமார் 40 ஆண்டு காலம் அரசுப் பணியாற்றியும் தமக்கென ஒரு சொந்த வீடு கூட இல்லாத இறுதி வரை வாடகை வீட்டில் வசித்தவர், சங்க நிதியில் ஒரு தேநீர் கூட அருந்தாத கட்டுக்கோப்பாளர், தனக்கென சிறுசேமிப்பு கூட ஏதுமின்றி தமது கடும் உடல்நிலை பாதிப்புகளுக்கு அரசு மருத்துவமனைகளையே நம்பி இருந்தவர், தமது குழந்தைகளை அரசுப் பள்ளியிலேயே படிக்க வைத்தவர், சங்கத்தின் கடைக்கோடி ஊழியனுக்கும் உற்ற தோழனாக விளங்கியவர், சமரசமற்ற போராளி, புத்தகங்களின் காதலன், இலக்கிய ஆளுமை, மொத்தத்தில் தலைமைக்கு மற்றுமல்ல, மனிதத்திற்கே இலக்கணமானவர். அன்னார் மறைந்தாலும், லட்சக்கணக்கான உழைப்பாளி மக்களின் மனதில் நீங்க இடம் பிடித்துள்ளதன் மூலம் காலத்தை வென்ற தலைவன்,


இத்துணை சிறப்புகளைப் பெற்ற, உழைப்பாளி மக்களின் நலனை மட்டுமே இடையறாது சிந்தித்த காலத்தை வென்ற தலைவர் தோழர் இரா.முத்துசுந்தரம், தமது 65ஆம் வயதில் 29.07.2017 அன்று தமது சிந்தனையை நிறுத்திக் கொண்டு அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை, இந்திய உழைப்பாளி மக்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு இயற்கை எய்தினார்,

அன்னாரின் பூத உடல் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அஞ்சலி செலுத்த அரசு ஊழியர் சங்க மாநில மைய அலுவலகத்தில் 30.7.2017 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை வைக்கப்பட்டது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட தலைவர்கள், பல்வேறு மாநில அரசு ஊழியர் சங்க தலைவர்கள், தலைமைச் செயலக ஊழியர் சங்க தலைவர்கள், பல்வேறு துறைவாரி சங்க தலைவர்கள், இந்திய தொழிற் சங்க மையத்தின் தலைவர்கள் உள்ளிட்ட ஏராளமான தலைவர்களும், ஆயிரக்கணக்கான ஊழியர்களும் அஞ்சலி செலுத்திய பின் நடைபெற்ற இரங்கல் கூட்டத்திற்கு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமையேற்றார். இந்திய தொழிற்சங்க மையத்தின் அகில இந்திய தலைவர் ஏ.கே.பத்மநாபன், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேனள பொதுச் செயலாளர் ஏ.ஸ்ரீகுமார், தோழர் பி.எச்.எம்.இஸ்மாயில், கேரள பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினர் உள்ளிட்ட மத்திய, மாநில தொழிற்சங்க தலைவர்கள் இரங்கல் உரையாற்றினர்,

இறுதியாக, சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் ஆராய்ச்சிக்காக தமது உடல் வழங்கப்பட வேண்டும் என்ற அவர் விருப்பத்திற்கேற்ப அன்னாரின் குடும்பத்தினரின் முழு சம்மதத்தோடு 30.07.2017 அன்று மாலை அன்னாரின் பூத உடல் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

**மு.அ.**




MUTHU SUNDARAM
Received the body of Thiru. Muthusundaram
65 years as voluntary whole body
donation on 30.07.17 at 4.00 pm
Director
Institute of Anatomy, Madras Medical College

ஆர்.எம்.எஸ். உடல் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட பிறகு மருத்துவமனையிலிருந்து அளிக்கப்பட்ட சான்றிதழ்

# நேர்மை ஒரு வேலி

சிறுகதை

பசு.தனபாலன்

ரமேஷ் டிபன் பாக்ஸை எடுத்து வைத்து அலுவலகம் கிளம்பத் தயாரானபோது, அருகே வந்து நின்றாள் மைதிலி.

"ஏங்க, நம்ம ரகு இந்த வருஷம் பிஃப்த் ஸ்டாண்டர்டு பாஸ் பண்ணறான். இப்பவே ஒரு நல்ல தனியார் ஹைஸ்கூலா பார்த்து அப்ளிகேஷன் கொடுத்து வச்சாதான் சீட் கிடைக்கும்".

"மைதிலி, தனியார் ஸ்கூல்லே டொனேஷன், டெர்ம் பீஸ்னு எக்கச்சக்கமா பணம் பிடுங்கறாங்க. நம்ம வசதிக்கு கவர்மெண்ட் ஹைஸ்கூலே போதும். இப்ப கவர்மெண்ட் ஸ்கூல்லேயும் தனியார் ஸ்கூல் மாதிரி நல்லா சொல்லிக் கொடுக்கிறாங்க".

அவள் சமாதானம் ஆகாமல் முனகினாள்.

"தாலுகா ஆபீஸ்லே கிளார்க்குன்னுதான் பேர். நம்ம பையனை ஒரு நல்ல ஸ்கூல்லே சேர்த்து படிக்க வைக்க முடியுதா?"

"சும்மா புலம்பாதே. அடுத்த வருஷம் ரம்யாவையும் ஹைஸ்கூல்லே சேர்த்தாகணும். என் வருமானத்துக்கு தகுந்த மாதிரிதானே செலவு செய்ய முடியும்?"

"முரளியும் உங்க ஆபிஸ்லேதானே வேலை செய்யறார்? எப்படி அவர் பசங்களை ஏற்காடு கான்வென்ட்லே சேர்த்து படிக்க வைக்கிறார்?"

"அவர் ரெண்டு கையை நீட்டி லஞ்சம் வாங்கறான். நான் நேர்மையாக கிடைக்கிற சம்பளத்திலே வாழ்க்கை நடத்தறேன்".

"உங்க நேர்மையாலே என்ன பிரயோஜனம்? முரளி, 'இன்னோவா' கார் வாங்கிட்டார். பைபாஸ் ஏரியாவிலே நாலு பிளாட் கூட வாங்கிட்டாராம். இனிமேலே நீங்களும் லஞ்சம் வாங்குங்க".

"நேர்மைங்கிறது ஒரு வேலி மாதிரி மைதிலி. அந்த வேலிக்குள்ளே இருக்கிற வரைக்கும்தான் நமக்கு பாதுகாப்பு. என்னை அந்த வேலியைத் தாண்டச் சொல்லாதே".

கோபமாய் பேசியபடி தன் பழைய மொபைட்டைக் கிளப்பினான் ரமேஷ்.

முற்பகல் நேரம். அலுவலகத்தில் ரமேஷ் தன் பணியில் மும்முரமாக இருந்தபோது ஓர் இளைஞன் வந்தான்.

"சார், என் பேர் பிரபாகர். பட்டா மாறுதலுக்காக விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். அதை சீக்கிரம் கவனிச்சிங்கன்னா தேவலை" என்றவன், பவ்யமாக ரமேஷை நெருங்கி கற்றையாய் பணத்தை எடுத்து நீட்டினான்.

ரமேஷின் மனதில் ஒரு கணம் மனைவியின் வார்த்தைகள் ஊசலா, மறுகணம் அந்த சபலத்தை உதறினான்.

"நான் லஞ்சம் வாங்க மாட்டேன். உங்க விண்ணப்பம் சரியாக இருந்தா உடனே நோட் எழுதி மேலதிகாரிக்கு அனுப்பிடுவேன். நீங்க போகலாம்".

அந்த இளைஞன் ரமேஷை மரியாதையுடன் பார்த்துவிட்டு நகர்ந்தான்.

பிற்பகலில் திடீரென அலுவலகமே பரபரப் படைந்தது. அலுவலர்கள் சிறுசிறு குழுக்களாய் கூடி நின்று பேச ஆரம்பித்தனர். ரமேஷ் என்ன ஏது என்று புரியாமல் எழுந்து போய் விசாரித்த போது -

"காலையிலே பட்டா மாறுதல் விண்ணப்பத் தோட வந்த பிரபாகர்ங்கிறவர்கிட்டே நம்ம ஸ்டாப் முரளி பத்தாயிரம் ரூபா லஞ்சம் வாங்கியிருக்கிறார். லஞ்சம் கொடுத்தவன் ரகசியமா அதை செல்போன்லே வீடியே எடுத்துகிட்டு போய் ஃபேஸ் புக்ல போட்டுட் டான். இப்ப 'லஞ்சம் வாங்கும் அரசு ஊழியர்' என்கிற தலைப்போட முரளி லஞ்சம் வாங்கற காட்சி எல்லா சோஷியல் மீயாவிலேயும் வலம் வருது. மேலிடம் முரளியை சஸ்பெண்ட் பண்ணப் போறதா பேச்சு".

ரமேஷ் துணுக்குற்றான். காலையில் வந்த அந்த இளைஞனின் ஷர்ட் பாக்கெட்டில் செல்போன் துருத்துக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. 'அவன் முதலில் எனக்குத்தான் வலை விரித் திருக்கிறான். நான் தப்பி விட்டேன். ஒருவேளை நான் சபலப்பட்டு லஞ்சம் வாங்கியிருந்தால்...? நினைக்கவே மனம் பதறியது. வேலையோடு மானம் மரியாதையுமல்லவா போயிருக்கும்? ரமேஷ் மனதுக்குள் நன்றி சொல்லிக் கொண்டான்.

- வேலியாக நின்று தன்னை காப்பாற்றிய நேர்மைக்கு!

❖

## வடிகட்டிய வாட்ஸ்அப் மெய்

# உண்மையில் கம்யூனிசம் தோற்றுப் போனதா?

**நா**ட்டில் இருக்கும் பல ஓட்டுக் கட்சிகளை போல அதுவும் ஒரு ஓட்டுக்கட்சி. உலகில் இருக்கும் பல கொள்கைகளை போல அதுவும் ஒரு கொள்கை. பொருளாதாரத்தை அடிப்படை யாகக் கொண்ட ஒரு உலகியல் பார்வை. முதலாளித்துவத்திற்கு எதிரான கூட்டு நடவடிக்கை. இப்படி பலவாறான மதிப்பீடுகள் கம்யூனிசத்தைப் பற்றி மக்களிடம் இருக்கிறது. ஆனால் கம்யூனிசம் என்பது ஒரு இயல்பு. மனிதர் களின் இயல்பான ஒரு உணர்வு. சாலையில் நடந்து செல்லும் ஒருவர் அங்கு ஒருவன் மற்றொருவனை அடித்து உதைத்துக்கொண்டிருப்பதை கண்டால், பாதிக்கப்பட்டவனின் சார்பில் பாதிப்பவனை தடுத்து நிறுத்த முன்வருவாரே அவர் பெயர் தான் கம்யூனிஸ்ட். அந்த உணர்வு தான் கம்யூனிசத்தின் சாரம். அந்த உணர்வை பரந்துபட்ட தன்மை களுடன், பின்னணி, விளைவுகள் குறித்த பார்வை யோடு உலகளாவிய நிகழ்வுகளுடன் பொருத்தி அதற்கான தீர்வுகளை சிந்தித்தால் அதன் பெயர்தான் கம்யூனிசம்.

இருக்கும் பலவிதமான அரசியல் கட்சிகளைப் போல ஆட்சிக்கு வருவதை மட்டுமல்ல யாருக்கான அரசாக இயங்குவது என்பதையே முதன்மைப்படுத்துவதால் இருக்கும் கட்சிகளி டையே கம்யூனிசம் மாறுபாடுடையது. மக்களின் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் காரணம் தேடி மருளவைக்கும் சொற்களால் மலட்டுப் பரப்புரை செய்யும் கொள்கைகளிடையே ‘‘உலகை வியாக்கி யானம் செய்வதல்ல அதை மாற்றியமைப்பதே நோக்கம்‘‘ என்று அறிவித்துச் செயல்படுவதால் கம்யூனிசம் தனித்தன்மையுடையது. மனித இனத்தின் பண்டைய வரலாறு முதல் இன்றைய கலாச்சார வீக்கங்கள் ஈறாக அனைத்தையும் அறிவியல் மேடையில் உரசிப்பார்த்து இனங் காண்பதால் பொருளியல் கொள்கை எனும் தூற்றல்களில் நனையாமல் நிற்பது. மனிதர்களின் முடை நாற்றமெடுக்கும் சிந்தனை ஊறல்களை, அது பல்லாண்டுகளாக தொடர்ந்திருந்தாலும், சுகந்த மணம் தருவதாக நினைத்துக் கொண்டிருந் தாலும், அவைகளை அகற்றி இறுக்கம் தளர்த்தும் வழிமுறைகளுடன் இருப்பதால்; விமர்சனம் சுயவிமர்சனம் எனும் தளத்தில் நிற்பதால் முதலாளித்துவத்திற்கு மட்டும் எதிரானதாக இதை குறுக்கிவிட முடியாது.

கம்யூனிசம் ஒரு மதமல்ல, இங்கு முன்னாசி களோ முக்கிய தெய்வங்களோ இல்லை. மார்க்சும், ஏங்கெல்சும் படைத்தவற்றை லெனினும், மாவோவும் மேம்படுத்தினர். எனவே இங்கு வேதமும் இல்லை. உழைப்பே இங்கு விதி, போராட்டமே மகிழ்ச்சி. எல்லாம் சரி, கம்யூனிசம் ஏன் நீடித்த வெற்றியை பெறமுடியவில்லை?

ரஷ்யா, சீனா என்று சோசலிச நாடுகள் இன்று முதலாளித்துவத்தின் பிடியில். சோசலிச தலைவர்களே முதலாளித்துவத்தை மீள்இறக்கு மதி செய்தவர்கள். எப்படி நிகழ்ந்தது இது? கம்யூனிச கொள்கைகளின் கட்டுறுதியான தாக்கமும், மக்களிலிருந்து உருவாகிவந்த தலை வர்களின் ஈடுபாடும் அத்தனை நெகிழ்வானதா? புரட்சியை நடத்திய மக்கள் இவர்களின் பிறழ் தலுக்கு எப்படி மௌன அங்கீகாரம் வழங்கி னார்கள்? என்றெல்லாம் அலையலையாய் எழுந்து வரும் கேள்விகள். இவைகள் எல்லாவற்றையும் விட பதிலளிக்கத்தகுந்த கேள்வி ஒன்று உண்டு. மக்களின் மன இயல்புகளை புரிந்து கொள் ளாமல், இயற்கைக்கு அப்பாற்பட்டு வரட்டுக் கற்பனையான சூத்திரமாக கம்யூனிசம் இருப்பத னால் தான் கம்யூனிசத்தை நோக்கி நகராமல் சோசலிசம் பின்னடைந்து விடுகிறதா? என்பது தான் அந்தக் கேள்வி.

இந்தக் கேள்வியின் அடிப்படை எங்கிருக் கிறது? சோசலிச சமுதாயத்தில் அல்லது சோசலிச அரசின் கீழ் இருக்கும் மக்கள் கட்டாயமாக தங்கள் உழைப்பை அரசுக்கு செலுத்தவேண்டும் ஈடாக அரசு தரும் ஊதியத்தை பெற்றுக்கொள்ள வேண்டும், அது போதுமானதாக இல்லாமற் போனாலும் கூட. தனியார்மயம் ஒழிக்கப்பட்டு எல்லாமே அரசுடமையாக இருக்குமாதலால், தனிப்பட்ட தகுதிக்கு உரிய அங்கீகாரம் இல்லாமல் சமஊதியம் என்ற நிலை இருக்கும் என்பதால் முனைப்பு குறைந்து, ஆர்வம் கலைந்து உற்பத்தி குன்றும். நிர்வாகத்தினர், மூளை உழைப்பாளிகளுக்கு தனிப்பட்ட மரியாதை இல்லாமல் தொழிலாளர்களுடன் சமமாக்கப் படுவதால் அவர்களுக்கு மனரீதியான திருப்தி யின்மை ஏற்படுவதால் நிர்வாக சீர்கேடு பெருகும், இதனால் ஊழல் அதிகரிக்கும். ஒருபக்கம் உற்பத்தி குறைவு, மறுபக்கம் நிர்வாக சீர்கேடு இரண்டும்

சேர்ந்து சோசலிச அரசை பலவீனமாக ஆக்கி விடுகிறது. இதனால் தான் சோசலிச அரசுகள் நீடிக்க முடிவதில்லை. இதுதான் அந்த கேள்வியை எழுப்புபவர்கள் சொல்லும் விளக்கம். ஒரு நாட்டில் சோசலிச அரசு எழுவதை ஏகாதிபத்திய அரசுகள் சகஅரசாக வாழ்த்தி வரவேற்கின்றன, ஆனால் கம்யூனிசத்தின் உள்ளீடற்ற தன்மையால் தான் அவைகள் வீழ்கின்றன, இது அந்தக் கேள்வியை எழுப்புபவர்கள் சொல்ல வரும் நோக்கம்.

ஒரு நாட்டில் புரட்சியை சமைப்பதல்ல, புரட்சிக்கு பிறகு அதை வளர்த்தெடுத்துச் செல்வது தான் புரட்சியை விட பல மடங்கு கடினமான காரியம். இதற்கு கம்யூனிசம் தோற்றுவிட்டதாக உலகம் முழுவதும் பரப்பப்பட்டிருக்கும் இந்தவகை அவதூறுகளே சான்று. ஒரு நாட்டில் புரட்சி ஏற்பட்டாலோ அல்லது ஏற்படும் என அஞ்சினாலோ அந்நாட்டின் மீது எல்லாவித அரசியல் ராணுவ நெருக்கடிகளை ஏற்படுத்துவது ஒருபக்கம், கொலை கொள்ளை அடக்குமுறை; பஞ்சம் பட்டினி என்று அவதூறுகளை பொழிந்து கருத்து நெருக்கடிகளை ஏற்படுத்துவது மறுபக்கம். இந்த உலகில் அதிகாரத்தில் இருக்கும் முதலாளித்துவம் வெகுசில நாடுகளில் ஏற்படும் புரட்சிகர நடவடிக்கைகளுக்கு எதிராக எடுத்து வரும் இத்தகைய நடவடிக்கைகளே கம்யூனிசத்தின் உள்ளீடு குறித்து ஏகாதிபத்தியங்கள் எந்த அளவுக்கு பீதியடைந்திருக்கின்றன என்பதற்கான சான்று.

கம்யூனிசம், சோசலிசம் இரண்டையும் கலந்துகட்டி குழப்பிக்கொண்டு சொல்லப்படுபவது தான் மேற்கண்டது. எந்த ஒரு தனி நாட்டிலும் கம்யூனிசம் ஏற்பட முடியாது. முதலாளித்துவ ஆட்சியை புரட்சிகர நடவடிக்கையின் மூலம் கைப்பற்றி சோசலிச ஆட்சி ஏற்பட்டதும், தனியார் என்று யாருமே இருக்கமாட்டார்கள் என்பது கற்பனைதான். பன்னாட்டு முதலாளிகளின், தரகு முதலாளிகளின் சொத்துகள் பறிக்கப்பட்டாலும் தேசிய முதலாளிகள், குறு முதலாளிகள் நிபந்தனைகளுடன் செயல்பட அனுமதிக்கப்படுவார்கள். அவர்களின் கீழ் தொழிலாளர்கள் வேலைசெய்வார்கள். வித்தியாசம் என்ன? முன்புபோல் வரைமுறையற்று அவர்களால் சுரண்ட முடியாது. சட்டப்பாதுகாப்புடன் தொழிலாளர்கள் இருப்பார்கள். முன்பு சட்டப் பாதுகாப்புடன் முதலாளிகள் தொழிலாளிகளை சுரண்டிய கொடுமை முற்றுப்பெற்று அந்த சட்டப்பாதுகாப்பு தொழிலாளிகளுக்கு இருக்கும் என்பதை சகித்துக்கொள்ள முடியாதவர்கள் தான், தொழிலாலர்களின் ஆர்வம் குறைந்துவிடும் உற்பத்தி குறையும் உற்பத்தித்திறன் குலைந்து விடும் என்றெல்லாம் கதையளக்கிறார்கள்.

உண்மையில் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் குறையும் என்பதைவிட முதலாளிகளின் லாபம் குறையும் என்பதுதான் உண்மை. அதுவரை முதலாளித்துவ நிர்வாக முறையின் கீழிருந்த தொழிலாளர்கள் ஒரு சொடுக்கில் மாறிவிடமுடியாது. இது மேலிருந்து திணிக்கப் படுவதுமில்லை. கீழிருந்து படிப்படியாக ஏற்படும் மாற்றம். இதுவரை தங்களின் லாபத்தை மட்டுமே கருதி ஆட்குறைப்பு செய்துவந்த நிறுவனங்கள் சோசலிசத்தின் கீழ் அதனதன் உற்பத்தி அளவீடுகளின் படி தொழிலாளர்களை சேர்த்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இந்தவகையில் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் உற்பத்தி பெருகும் என்பது தான் உண்மை. இவ்வாறான நிபந்தனைகளை ஏற்கமறுக்கும் நிறுவனங்கள் அரசால் ஏற்கப்படும். புதிதாக வேலை கிடைத்தவர்கள் உற்சாகத்துடன் வேலை செய்வர் என்பதுடன் முன்பு தனிப்பட்ட முதலாளியின் லாபத்திற்காக உழைத்தவர்கள் தற்போது நாட்டுக்காக தமக்கான முன்னேற்றத்திற்காக உழைப்பர். இந்தப் புரிதலையும், விழிப்புணர்வையும் அரசு செய்யும். அத்தோடு முதலாளிகளின் கொடுமையை நேரடியாக அனுபவித்து எதிர்த்துப் போராடியவர்கள் வெற்றிபெற்ற உற்சாகத்துடன் உழைப்பர் என்பதும் உண்மை. ஜார் ரஷ்யாவில் 2.1 கோடி ரஷ்ய பவுண்டாக இருந்த விவசாய உற்பத்தி 1930களில் 11 கோடி ரஷ்ய பவுண்டாக அதிகரித்தது. தொழில் துறையில் 1928ம் ஆண்டு உற்பத்தியை 100 விழுக்காடு என்று கொண்டால் 1927ம் ஆண்டு 82.4 விழுக்காடும் 1929ம் ஆண்டு 123.5 விழுக்காடும் 1930 ம் ஆண்டு 171.4 விழுக்காடும் உயர்ந்துள்ளது. (இந்த மண்ணில் சொர்க்கத்தைப் படைப்போம் - இரயாகரன்) எனவே புரட்சிக்குப் பின் உற்பத்தி கூடியுள்ளதேயன்றி குறையவில்லை.

தனியார் நிறுவனங்கள் படிப்படியாக பொதுத் துறை நிறுவனங்களாக மாற்றமடைவதை, முதலாளித்துவ நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களுடன் ஒப்பிட்டு வேலை செய்யமாட்டார்கள், ஊழல் பெருகும் என்றெல்லாம் கவலையுறுபவர்கள், பொதுத்துறை நிறுவனங்களின் சீரழி

வும், ஊழலும் தனியார்மயத்தின், தனியுடமையின் விளைவுகள் என்பதை மறந்து விடுகிறார்கள். தனியார்மயத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே பொதுத்துறை நிறுவனங்கள் சீரழிக்கப்படுகின்றன. நல்ல லாபமீட்டும் நிறுவனங்கள் கூட பலநூறு கோடி சொத்துக்களுடன் சில கோடிகளுக்கு விற்கப்படுவது மக்களை காப்பதற்காகவா இல்லை அந்த மக்களை சுரண்டுவதற்காகவா? பொதுத்துறை நிறுவனங்களில் லஞ்ச ஊழல் பெருத்துவிட்டது, தனியாரிடம் இருந்தால் தான் சிறப்பான நிர்வாகம் கிடைக்கும் என்று தனியார்மயத்திற்கு குடை பிடிப்பவர்கள் தனியார் நிறுவனங்களின் ஊழலையும், முறைகேடுகளையும் காட்டி ஒருபோதும் அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கோரமாட்டார்கள். காரணம் அவர்களின் கோரிக்கைகள் வர்க்க நலனிலிருந்து வெளிப்படுபவையே அன்றி நிர்வாகச்சிறப்பிலிருந்தல்ல.

என்னுடையது எனும் எண்ணம் இருந்தால் தான் ஒரு பொருளை பாதுகாக்கும் எண்ணம் வரும். அதுவே பொதுச்சொத்தாக இருந்தால் அலட்சியமும், அழிப்பதும் பெருகத்தான் செய்யும் இது இயல்பு என்பவர்களும் இருக்கிறார்கள். ஆம் இது இயல்புதான். யாருக்கான இயல்பு? தன்னுடைய உரிமையில்லாத எதையும் தான் அடையத்துடிக்கும், அதையே தனிமனித உரிமையாக, முன்னேற்றமாக கூறித்திரியும் முதலாளித்துவ வக்கிரம் பிடித்தவர்களின் இயல்பு. ஒரு (கிராமத்து) மனிதன் தனக்கு எந்தவித லாபமும் இல்லையென்றாலும் சின்னஞ்சிறு செடி அழியும் நிலை ஏற்பட்டால் அதை காக்க முனைவான். ஆனால் வேறொரு (நகரத்து) மனிதனோ வளர்ந்த பெரிய மரமானாலும் தனக்கு லாபம் கிடைத்தால் வெட்டி விற்கத்தயங்க மாட்டான். இந்த இருவரின் செயல்பாடுகளின் பேதம் எதை அடிப்படையாகக் கொண்டது? பொதுச்சொத்தை தனதாக்கிக் கொள்ளும் வெறியையல்லவா அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பொதுச்சொத்துகள் யாரால் அழிகின்றன? ஆக்சிஜன் தொழிற்சாலைகளாக இருந்த உலகின் காடுகளை அழித்தது யார்? வற்றாத ஆறுகளை வரளச்செய்தது யார்? நிலத்தடி நீரை தனது சொந்த லாபத்திற்காக உறிஞ்சிக்குடித்து மக்களை குடிநீருக்காக அலைய வைத்திருப்பது யார்? காற்றை மாசுபடுத்தியது யார்? மக்கள் வாழ்வை நாசப்படுத்தியது யார்? உலகில் பொதுச்சொத்து என்று எதுவுமே இருக்கக் கூடாது எல்லாம் தனதாக இருக்கவேண்டும் என்பதினால் தான் இத்தகைய கோரங்கள். ஆக மக்கள் இயல்பு என்று இவர்கள் கூறுவது தங்களுடைய இயல்பைத்தான். யார் இதுவரை பொதுச்சொத்தை வரைமுறையின்றி அழித்து நாசம் செய்தார்களோ அவர்கள் தான் இப்போது தனியார்மயப் படுத்துவதன் மூலம்தான் பொதுச்சொத்தை காக்கமுடியும் என்பவர்கள். இவர்களின் நோக்கம் காப்பதல்ல, தன்னுடையதாக்கிக் கொள்வது.

தன்னுடைய உழைப்பின் பலன் முழுமையாக தனக்கு கிடைக்கும் என்றால்தான் ஒரு மனிதன் தன்னுடைய ஈடுபாட்டுடன் கூடிய முழுமையான உழைப்பை அதில் செலுத்துவான் என்பது இவர்களுடைய வேதவசனங்களில் ஒன்று. இதைச்சொல்லுவது யார்? உழைக்கும் தொழிலாளிகளின் உழைப்பை யார் ஒட்டச்சுரண்டி தன்னை வளப்படுத்திக் கொள்கிறார்களோ, அவர்கள் தான். இன்றைய தொழிலாளர்கள் காலம் மறந்து தினமும் உண்ணும் உறங்கும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் உழைத்துக் களைப்பது தன் உழைப்பின் பலன் முழுமையாக தனக்கு கிடைக்கிறது எனும் திருப்தியினால் அல்ல. எவ்வளவு உழைத்தாலும் தாங்கள் சுரண்டப் படுவதை அறியாமல் அவர்களை பசியே ஆண்டுகொண்டிருக்கிறது என்பதால். முதலாளித்துவம் மக்களை தின்று கொண்டிருக்கிறது. ஆனாலும் மக்கள் உழைப்பை மறக்கவில்லை. ஆனால் கம்யூனிசம் வந்தால் உழைப்பை மறந்து விடுவார்கள், ஆர்வம் குன்றிவிடும் என்கிறார்கள். இதைத்தான் சாத்தான் வேதம் ஓதுதல் என்பார்களோ.

மக்கள் கம்யூனிசத்தை புரிந்து அதை ஏற்றுக்கொண்டு கம்யூனிஸ்டுகளாக மாறுவதும் அதன்பின்னர் புரட்சியும் சாத்தியமில்லாத ஒன்று என்பது சத்தியமில்லாத கூற்று. புரட்சிக்கு அனைவரும் கம்யூனிஸ்டுகளாக மாறவேண்டிய அவசியமில்லை என்பதுடன், முதலாளித்துவம் மக்களை கம்யூனிசத்தை நோக்கி விரட்டுகிறது என்பதுதான் சாத்தியப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே கம்யூனிசம் தோற்கவில்லை. நிச்சயம் அது வெல்லும்.

*(வாட்ஸ் அப்பில் வரும் செய்திகளில் பெரும்பாலானவை நம்பமுடியாத வகையில் இருந்தாலும் எப்போதாவது சில நேரங்களில் அத்தி பூத்தாற்போல ஏதாவது ஒரு நற்செய்தியும் வந்து விடுகிறது. அப்படி வந்த தகவல்தான் இது. இதில் உள்ள உண்மைத்தன்மை ஆராயப்பட்டே இங்கே வெளியிடப்பட்டுள்ளது)* ❖

# பெண்களுக்கான குடும்ப சட்டங்கள்

என்னதான் சமூகத்தில் பெண்கள் சம உரிமை பேசினாலும், சமத்துவத்துக்காகப் போராடினாலும் குடும்ப உறவில் அவர்கள் உரிமை கோராத அல்லது உரிமை கோர இயலாத பலவீனர்களாகவே உள்ளனர். குழந்தைகளின் எதிர்காலத்திற்காக, குடும்ப மானம் காப்பதற்காக அவர்கள் தங்கள் நியாயமான உரிமைகளைக் கூட விடக் கொடுத்து விடுபவர்களாக உள்ளனர். கணவனால் கைவிடப்பட்டவர்கள், கண்டுகொள்ளாமல் விடப்பட்டவர்கள், விவாகரத்து பெற்றவர்கள், என்று பலதரப்பட்ட குடும்ப பிரச்சனைகளில் சிக்குண்ட பெண்களுக்கு சட்டத்தில் பாதுகாப்பும் புகலிடமும் உள்ளது. இந்த சர்வதேச மகளிர் தினத்தில், அவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சனைகள் கேள்விகளாக தொகுக்கப்பட்டு பதில்கள் சட்டபூர்வமாக கொடுக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பெண்கள் மட்டுமல்ல, பொதுவாக பெண்கள் அனைவருமே அறிந்துகொள்ள வேண்டிய தகவல்கள்தான் இவை. பெண்களை பொருட்டாக நினைக்காத ஆண்களும் இதை படித்து எச்சரிக்கையோடு இருப்பதும் நலம் பயக்கும்.

**கணவன் அவருடைய மனைவியை பராமரிக்க கடமைப்பட்டவரா? அதை மீறினால் அவருக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரம் என்ன?**

கணவன் அவருடைய மனைவியை பராமரிக்க கடமைப்பட்டவர். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125(1)(அ)படி, மனைவி முதலாம் வகுப்பு நீதித்துறை நடுவர் முன்பு மனு தாக்கல் செய்து, அதில் அவருடைய கணவர் மாதாந்திர வாழ்க்கை பொருளுதவி வழங்க கட்டளை பெறலாம்.

**விவாகரத்து ஆன மனைவி வாழ்க்கை பொருளுதவி பெற அருகதையுள்ளவரா?**

ஆம். பிரிவு 125(1)(அ) குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி, விவாகரத்து செய்யப்பட்ட மனைவி மறுமணம் செய்யவில்லை என்றால் அவள் அவருடைய கணவரிடமிருந்து மாதாந்திர வாழ்க்கைப் பொருளுதவி வழங்க உத்தரவு பெறலாம்.

**வாழ்க்கைப் பொருளுதவி வழங்க போட்ட உத்தரவை மீறுகிற கணவருக்கு தண்டனை வழங்க முடியுமா?**

ஆம். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125(3)-ன்படி, கணவர் ஒருவர், ஒவ்வொரு உத்தரவை மீறுகிற செயலுக்கு, அதை முழுவதுமாக அல்லது பகுதியாக ஒவ்வொரு மாத வாழ்க்கை பொருளுதவி செலுத்தத் தவறினாலும், அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனையும், அல்லது அதை செலுத்தும் வரையிலும், அல்லது அதற்கு முன்பு செலுத்தி விட்டாலும், அந்த காலத்திற்குள் அவரை சிறையில் வைக்க முடியும்.

**வாழ்க்கை பொருளுதவி வழங்க இட்ட உத்தரவை நிறைவேற்ற முடியுமா?**

ஆம். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 128-ன்படி, வாழ்க்கை பொருளுதவி பெறப் போட்ட உத்தரவை எந்த ஒரு நீதித்துறை நடுவரும் எந்த ஒரு இடத்திலும் கணவருக்கு எதிராக எந்த இடத்தில் உத்தரவு வழங்கப்பட்டதோ அந்த இடத்திலும், அல்லது எந்த இடத்தில் வசிக்கின்றாரோ அங்கும் நிறைவேற்றலாம்.

**ஒரு இந்து பெண் விவாகரத்து ஆன பின்பு தன் கணவரிடமிருந்து வாழ்க்கை பொருளுதவி பெற உரிமையுள்ளவரா?**

ஆம். பிரிவு 25, இந்து திருமணச் சட்டம், 1955-ன்படி ஒரு பெண் தன்னை பராமரிக்க முடியவில்லை என்றாலும், அவரை காப்பாற்றி அவருக்கென்று தனிப்பட்ட வருமானம் இல்லை என்றாலும், மனைவி தாக்கல் செய்யும் மனுவின் மீது அவரது கணவரை நிரந்தர வாழ்க்கை பொருளுதவி மற்றும் ஜீவனாம்சம் அவருடைய ஆயுட்காலத்திற்கு மிகாமல் வழங்கலாம். அவர் வழக்கு நிலுவையில் உள்ளபோது ஜீவனாம்சம் மற்றும் வழக்கு நடத்துவதற்கு இதர செலவு தொகையை அவருடைய கணவரிடமிருந்து அந்த சட்டம் பிரிவு 24-ன்படி பெறலாம்.

**ஒரு முஸ்லிம் பெண் விவாகரத்து ஆன பின்பு கணவரிடமிருந்து எந்த பரிகாரமும் பெற உரிமையுள்ளவரா?**

ஆம். பிரிவு 3 முஸ்லிம் பெண்கள் (விவாகரத்து ஆன பின்பு உரிமைகள் பாதுகாத்தல்) சட்டம், 1986-ன்படி விவாகரத்து ஆன பின்பு ஒரு முஸ்லிம் பெண் நியாயமான மற்றும் நேரிய ஜீவனாம்சம்

இதத் காலத்தில் பெற உரியவர். மகர் அல்லது இவர் மற்றும் அவருக்கு திருமணத்திற்கு முன்பு, திருமணத்தின் போது அல்லது திருமணத்திற்கு பின்பு வேறு ஒருவர் கொடுத்த சொத்துக்கள் நீங்கலாக பெறலாம்.

**முஸ்லிம் பெண்கள் தங்களையும் மற்றும் சின்ன குழந்தைகளையும் பராமரிக்க சிறப்பு வழிவகை உள்ளதா?**

ஆம். முஸ்லிம் பெண்கள் (விவாகரத்து ஆன பின்பு உரிமைகள் பாதுகாத்தல்) சட்டம் 1986 பிரிவு 2(ஆ) படி நியாயமானமற்றும் நேரிய வழிவகை யில் சிறப்பு இழப்பீடு/ஜீவனாம்சம் பெற, அதாவது அவருடைய முன்னாள் கணவரிட மிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு குழந்தையும் பிறந்த தேதியில் பெறுகூதற்கு வழி செய்துள்ளது.

**ஒரு முஸ்லிம் பெண் அவருடைய கணவர் ஜீவனாம்சம் கொடுக்க தவறினால் பரிகாரம் பெற உரிமையுள்ளவரா?**

ஆம். பிரிவு 3(4), முஸ்லிம் பெண்கள் (விவாகரத்தான பின்பு) உரிமைகள் பாதுகாத்தல் சட்டம், 1986-ன்படி நீதிமன்றம் பற்றுகைக் கட்டளை, அவருடைய கணவருக்கு எதிராக நீதிமன்றம் உத்தரவு வழங்கிய பின்பும், கணவர் ஜீவனாம்சம் செலுத்தாமல் இருந்தால் நீதிமன்றம் அவருடைய மற்ற உறவினர்களை அவருடைய மனைவிக்கு ஜீவனாம்சம் செலுத்த உத்தரவு வழங்கலாம்.

**ஒரு பெண் வயதான காலத்தில் தன்னை காப்பாற்ற முடியாமல் நிர்க்கதியாக இருந்தால் சட்டம் அவருக்கு என்ன புகலிடம் செய்கிறது?**

ஒரு திட்டம் சுவாதார் என்பதை வடிவமைப்பு செய்துள்ளது. அது மிகவும் நெகிழ்வான மற்றும் புதிய மாறுதல் உண்டாகும் அணுகுமுறையை பல்வேறு வகையான பெண்களின் தேவைகள் வெவ்வேறு வகையான சூழ்நிலைகளில் மாறுபட்ட சந்தர்ப்பங்களில் உள்ளதை பூர்த்தி செய்ய வழிவகை செய்கிறது. "சுவாதார்" திட்டம் ஒவ்வொரு பிரிவு பெண்களுக்கும் போட்டியிடு கிற கடினமான சந்தர்ப்பங்களில் குடும்ப அடிப்படையிலான புனிதமான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை தெரிகிற வகையில் வரைமுறை செய்கிறது. அந்த பெண் அவருடைய கணவர் மற்றும் குழந்தைகளிட மிருந்து பிரிவு 125 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி அவளுடைய வயதான காலத்தில் தன்னை பராமரிக்க முடியவில்லை என்றால் ஜீவனாம்சம் கேட்கலாம்.

**ஒரு பெண் அவளுடைய குழந்தையின் பாதுகாப்பை கோரலாமா?**

ஆம். ஒரு பெண் தன்னுடைய குழந்தையின் பாதுகாப்பை விவாகரத்து வழக்கு நடக்கும் காலத்திலும் மற்றும் அதற்கு பின்பும் பிரிவு 36, சிறப்பு திருமணச் சட்டப்படியும், பிரிவு 36 சிறப்பு திருமணச் சட்டம் 1954-ன்படியும் கேட்கலாம். முஸ்லிம் சியா சட்டப்படி, ஒரு தாயார் உரிமைப்படி ஒரு ஆண் குழந்தை 2 வயது ஆகும் வரை அதனுடைய பாதுகாப்பையும் மற்றும் பெண் குழந்தையாக இருந்தால் 7 ஆண்டு வரை கேட்கலாம். சுன்னி சட்டப்படி ஒரு தாயார் தனக்குள்ள உரிமைப்படி ஆண் குழந்தையாக இருந்தால் 7 ஆண்டு வரையிலும், பெண் குழந்தை யாக இருந்தால் 15 ஆண்டுகள் வரையிலும் அதனுடைய பாதுகாவலை தன்னிடம் கொடுக் கும்படி கேட்கலாம்.

**ஒரு பெண் மறுதிருமணம் செய்ய உரிமை உள்ளதா?**

ஆம். இந்து திருமணச்சட்டம் 1955 பிரிவு 15-ன்படியும் மற்றும் சிறப்பு திருமணச் சட்டம் 1954 பிரிவு 30-ன்படியும் விவாகரத்து தீர்ப்பாணைப்படி திருமணம் கலைக்கப்பட்டால், அந்த பெண் மேல் முறையீடு செய்ய காலவரம்பு முடிந்த பின்பு மறுதிருமணம் செய்ய உரிமை உண்டு. மற்றும் மேல் முறையீடு வழக்கு இருந்தால் அது முடிவு பெற்ற பின்பு திருமணம் செய்யலாம். ஒரு முஸ்லிம் பெண்ணும் இதாத் காலம் முடிந்தபின் மறுமணம் செய்யலாம்.

**ஒரு பெண் திருமணம் சம்பந்தமான வழக்கை (நடவடிக்கைகளை) வழக்கை (நடவடிக்கைகளை) அந்த பெண் குடியிருக் கும் பகுதியில் உள்ள நீதிமன்ற எல்லைக்குள் மாற்ற உரிமை உள்ளவரா?**

ஆம். ஒரு பெண் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 24 படியும் மற்றும் சிறப்பு திருமணச் சட்டம் 1954 பிரிவு 40-அபடியும் உள்ள சில நிபந்தனைகளை பூர்த்தி செய்தால், வழக்கு (நடவடிக்கைகள்) நிலுவையில் உள்ள நீதிமன்றத்தில் இருந்து மாற்ற உரிமை உண்டு.

**ஒருபெண் 18 வயது பூர்த்தியாவதற்கு முன்பு திருமணம் செய்து கொள்ள கட்டாயப்படுத்த முடியுமா?**

முடியாது. இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு

5(3)-ன்படி 18 வயதுக்கு கீழ் உள்ள ஒரு பெண்ணின் திருமணத்தைத் தடை செய்கிறது மற்றும் அதை மீறினால் தண்டிக்கவும் செய்யலாம்.

**ஒரு பெண்ணை அவருடைய விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்ய நிர்ப்பந்தம் செய்ய முடியுமா?**

முடியாது. ஒரு பெண் அவருடைய விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்ய கட்டாயப் படுத்தப்பட்டால், அவர் அதை செல்லா நிலையது என்று நடைமுறையில் இருந்து நீக்க உத்தரவு பெறலாம். அது இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு 12-ன்படி பெறலாம். இஸ்லாமிய சட்டப்படி அவருடைய விருப்பப்படி சில நிபந்தனைகளின்படி திருமணம் செய்து கொள்ள உரிமை உள்ளது. மேலும் அவர் 15 வயது அடைவதற்கு முன்பு திருமணம் செய்து வைக்கப்பட்டிருந்தால் அந்தபெண் 15 வயது பூர்த்தியான பின்பு அந்த திருமணத்தை திருமணங்கள் கலைத்தல் சட்டம் 1939 பிரிவு 3(7)-ன்படி மறுதலிக்கலாம். மேலும், அந்தப் பெண் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 399-ன்படி திருமணத்திற்காக அவர் கடத்தப்பட்டு இருந்தால் அதற்கான தீர்வைத் தேடலாம்.

**ஒரு இந்துப்பெண் தன்னுடைய கணவரிடமிருந்து விவாகரத்து கோரலாமா?**

ஆம். இந்து திருமணச் சட்டம் 1954 பிரிவு 13ன்படி அச்சட்டத்தில் கூறப்பட்ட ஏதாவது ஒரு காரணத்திற்காக ஒரு இந்துப் பெண் அவரது கணவரிடமிருந்து விவாகரத்து வழங்குமாறு கோரலாம்.

**ஒரு இந்து பெண் நீதிவழி பிரிதல் தீர்ப்பாணை பெறலாமா?**

ஆம். ஒரு இந்துப் பெண் நீதிவழி பிரிதல் தீர்ப்பாணை பெற, இந்து திருமணச் சட்டம் 1954 பிரிவு 10ல் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக பெறலாம்.

**ஒரு இந்துப் பெண் ஒரு குழந்தையை தத்து எடுக்கலாமா?**

ஆம். இந்து தத்தெடுத்தல் மற்றும் வாழ்க்கை பொருளுதவி சட்டம் 1956ன்படி ஒரு இந்துப் பெண் ஒரு குழந்தையை தத்து எடுக்கலாம்.

**மகளுக்கு கூட்டு உரிமை சொத்தில் இந்து வாரிசுரிமை சட்டம் 1956ன்படி பங்கு பெற உரிமை உள்ளதா?**

ஆம். 2005ஆம் ஆண்டு இந்து வாரிசு உரிமை சட்டம் திருத்தம் செய்யப்பட்ட பிறகு ஒரு மகள், ஒரு மகனுக்கு பங்கு ஒதுக்கப்பட்ட அளவுக்கு கூட்டு உரிமை சொத்தில் பங்கு பெற உரிமை உள்ளவர் ஆவார்.

**ஒருமகளுக்கு குடும்ப சொத்தில் ஏதாவது பங்கு பெற உரியவரா?**

ஆம். ஒரு மகள், ஒரு மகன், விதவை மற்றும் முதலாம் நிலை இதர வாரிசுகள் மரபு உரிமையராக பெறும் அதே நேரத்தில் பங்கு பெற உரியவர் ஆவார்.

**ஒரு இந்துப் பெண் கைப்பற்றும் சொத்தில் மரபு உரிமையராக பெறும் சொத்தில் முழு உரிமையாளர் ஆவாரா?**

இந்து வாரிசு உரிமை சட்டம் 1956 பிரிவு 14ல் கண்ட சரத்துப்படி, எந்த சொத்தும் ஒரு இந்து பெண்ணின் கைவசம் அனுபவத்தில் இருந்தால் அந்தசொத்து, இந்த சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ கைப்பற்றிய தாக இருந்தால் அவள் அந்த சொத்தின் முழு உரிமையாளர் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடரும்...

தொகுப்பு : குப்ஸ்

## குடும்ப பாதுகாப்பு நிதி

எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அனைத்து ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் 25.06.2017 அன்று சேலம் மாவட்டத்தில் 10 ஆண்டுகள் ஆலோசக ராக பணிபுரிந்து மறைந்த திருமதி பிரேமலதா அவர்களின் குடும்ப பாதுகாப்பு நிதி வழங்கும் நிகழ்ச்சி அரசு ஊழியர் சங்க அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் ஜெகஜோதி தலைமையில் நடைபெற்றது. கருப்புசாமி, மணிலா, ராமசந்திரன், செல்வம், சேரலாதன், சக்திவடிவேல், ரமேஷ், விஜய்ஆனந்த் உட்பட திட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### பரிணமித்தாய் பெண்ணே....

வலிமையேறிய எழும்பணைத்தும்
உடைபடும் வலிபொறுத்து
உயிர் ஜீவன் பிரசிவித்தன்று
மறுபிறவியாய் தாய்மையானாய்
ஆண்டை சமூகத்தின் மிச்சம்
எச்சம் பல கடக்கையில்
ஏச்சும் பேச்சும் துச்சமென
துணிச்சலாய் கற்றதாலே
சந்திராயனை படைத்தாய்
சகலத்திலும் பரிணமித்தாய்
சாதனை பெண்ணே.....

ஆர். க.பி.ஜெ.

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

### ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கம்



நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் 14.07.2017 அன்று மாலை மாவட்டத் தலைவர் எஸ்.ஜோதிமணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எஸ்.தியாகராஜன் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.அரிகிருஷ்ணன் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் எஸ்.சிவகுமார் உள்ளிட்ட தோழமைச் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர்.

மாநிலச் செயலாளர் அ.சௌந்தரபாண்டியன் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் க.அசோக்குமார் நன்றி கூறினார். 15 பெண்கள் உட்பட 100க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.



**திருவள்ளூர்** மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட அளவிலான ஆர்ப்பாட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.

### தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம்

நாகை மாவட்ட மையம் சார்பில் மாவட்டப் பேரவை, மாவட்டத் தலைவர் ஜி.காளிமுத்து அரசுப் பணி நிறைவு மற்றும் ஊழியர் பயிலரங்கம் உள்ளிட்ட முப்பெரும் விழா மாவட்டச் செயலாளர் ந.ஜீவானந்தம் தலைமையில் நாகை



அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் 23.07.17 அன்று நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் கு.தமிழ்வாணன் வரவேற்புரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலப் பொருளாளர் எஸ்.கோவிந்த ராசு, மாநில பொதுச்செயலாளர் அ.ரத்தினம், முன்னாள் மாநிலத் தலைவர் கோ.தியாகராஜன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

"குடும்பப் பணி - அலுவலகப் பணி - சங்கப் பணி " என்ற தலைப்பில் முன்னாள் மாநிலத் தலைவர் என்.இளங்கோ பயிற்சி வகுப்பை நடத்தினார். மாநிலத் தலைவர் எம்.சௌந்தர் ராஜன் நிறைவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் இரா.முத்துராஜா நன்றியுரையாற்றி னார்.

### தமிழ்நாடு புதுவாழ்வு திட்ட பணியாளர் சங்கம்

திருவள்ளூரில் ஜூலை 24 அன்று மாவட்ட அளவிலான பேரவை கூட்டம் திருவள்ளூரில் நடைபெற்றது. தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தில் கடந்த 11-ஆண்டுகளாக பணியாற்றி வந்தவர் களின் பணி ஜீன்-30 அன்றுடன் நிறைவடைந் தது.இதனை தொடர்ந்து புதுவாழ்வு திட்டம்-2 ல் அதாவது அடுத்த திட்டமான தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டத்தில் மேற்படி பணியாற்றிய அனைத்து ஊழியர்களுக்கும் பணி வழங்கிட வேண்டும் என வலியுறுத்தி ஜீன்-27, 28-ஆகிய தேதிகளில் சென்னையில் உள்ள புதுவாழ்வு திட்ட அலுவலகம் முன்பு காத்திருக்கும் போராட்டம் மேற்கொண்டனர்.

இதனை தொடர்ந்து ஜூலை-15 குள் அனைவருக்கும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டத்தில் பணி வழங்கப்படும் என மாநில திட்ட இயக்குனர் உறுதியளித்துயிருந்தார்.ஆனால்



இது நாள் வரை பணி வழங்கவில்லை.இதனால் பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு வாக்குறுதி கொடுத்தடிப்படையில் உடனடியாக காலம் தாழ்த்தாமல் பணி வழங்க வேண்டும் என வலியுறுத்தி கோரிக்கை விளக்க பேரவை கூட்டம் திங்கள் அன்று திருவள்ளூரில் நடைபெற்றது.

மேலும் பணியாளர் பணி மதிப்பீட்டில் வந்தவர்கள்,ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர் திட்டத்தில் பணியாற்றியவர்கள் உட்பட அனைவருக்கும் பணி வழங்கப்பட்ட வேண்டும் எனவும் கோரிக்கை விளக்க கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதற்கு தமிழ்நாடு புதுவாழ்வு திட்ட பணியாளர்கள் நல சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஏ.நாகராஜ் தலைமை தாங்கினார். இதில் சங்கத்தின் மாநில தலைவர் ஆர்.தமிழ்அரசன்,மாவட்ட பொருளாளர் எஸ். நக்கீரன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், எம்.சந்தோஷ் ஆகியோர் பேசினர்.

### தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் தாக்கப்பட்டதை கண்டித்து **திருச்செங்கோடு** வட்டாட்சியர் அலுவலகம் முன்பு 06.07.2017 மாலை 5.50 மணிக்கு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தினர் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் ஆனந்தன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் வட்டச்




செயலாளர் ஏ.பாலசுப்ரமணியன், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் காரல் மார்க்ஸ் ஆகியோர் கண்டன விளக்கயுரையாற்றினார்கள். இறுதியாக வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வட்ட பொருளாளர் சின்னதம்பி நன்றி கூறினார்.

### நெடுஞ்சாலைத் துறை ஊழியர் சங்கம்

புதுக்கோட்டையில் ஜூலை 27 அன்று சங்கத்தின் சார்பில் 20 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதுக்கோட்டை நெடுஞ்சாலைத்துறை கோட்ட அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஒய்.எஸ்.அன்புச்செல்வன் தலைமை வகித்தார். நிர்வாகிகள் கேசவன், ரவிச்சந்திரன், ஜேம்ஸ்லூக், பழனிவேலு, அம்பிகாபதி, ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் க.செந்தில், அரசு ஊழியர் சங்க



மாவட்டத் தலைவர் கே.நாகராஜன், செயலாளர் ஆர்.ரெங்கசாமி, சி.வசந்தா, துரை.அரங்கசாமி, குமரேசன் உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக க.கருப்பையா வரவேற்க, எம்.பெரமையன் நன்றி கூறினார்.

### அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம்

சங்கத்தின் சார்பில் திருவாரூரில் ஜூலை 10 அன்று அகில இந்திய கோரிக்கை தினத்தை வலியுறுத்தி கருப்பு பேட்ஜ் அணிந்து போராட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தவமணி, சகுந்தலா, ரேவதி ஆகியோரும், சிஐடியு சார்பில் மாவட்டச் செயலாளர் டி.முருகையன், அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் வெ.சோமசுந்தரம், மாவட்டத் தலைவர் ஜி.பைரவநததன், வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ்.மகேஷ் உள்ளிட்டோர் உரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் ராஜி நன்றி கூறினார். இதில் 420 தோழர்கள் பங்கேற்றனர். ❖

# தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

**நாகப்பட்டினம்**

தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளரும், அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவருமான எஸ்.பார்த்திபன், அரசு ஊழியர் சங்க மாவட்ட



செயலாளர் தமிழரசன், மாவட்ட துணை தலைவர் அசோக்குமார் ஆகியோர் மீது சிவகங்கை மாவட்ட ஆட்சியரகத்தில் கொலைவெறி தாக்குதல் நடத்திய சிவகங்கை மகேந்திரன், பாலாஜி, பாலகுரு, பாலமுருகன், சேகர், ஆனந்தபூபாலன், மயில்வாகனன், பார்த்திபன் ஆகியோர் மீது கொலைமுயற்சி பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்ய வலியுறுத்தி மாநிலம் முழுவதும் வட்ட தலைநகரில் உணவு இடைவேளையின் போது கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டுமென்ற அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி 06.07.2017 அன்று மதியம் 01.30 மணிக்கு நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் நாகை வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.தமிழ்முல் அன்சாரி விளக்கவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் கண்டனவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார். 20 பெண்கள் உட்பட 65 பேர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். மாலை கீழ்வேளூர், வேதாரண்யம், தரங்கம்பாடி, மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம் உள்ளிட்ட அனைத்து வட்டத் தலைநகரிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**நீலகிரி**

கூடலூர் கிளையில் 7.7.2017 அன்று சந்திரபோஸ் தலைமையிலும், உதகை கிளையில் குமாரராஜா தலைமையில், குன்னூர் கிளையில் நஞ்சப்பன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கூடலூர் கிளளயில் 23 பெண்கள் 100 பேரும், உதகை கிளையில் 52 பெண்கள் உட்பட 140 பேரும் பங்கேற்றனர். துறைவாரி சங்க நிர்வாகிகள் சந்திரபோஸ், பரமேஸ்வரி, சலீம், ஆஸரா, பி.கே.ரவி, ஆர்.குமார், சுப்ரமணி, சாந்தகுமாரி, கோவிந்தம்மாள் ஆகியோர் உரையாற்றினர். ❖

# பணி ஓய்வு - பாராட்டு விழா

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தென் சென்னை மாவட்ட முன்னாள் இணைச் செயலாளர் இராசையா (மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர்) பணி ஓய்வு பாராட்டுக் கூட்டம் 31.07.2017 அன்று சாந்தோம் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் மாலை ப.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. சேப்பாக்கம் பகுதிக் குழு செயலாளர் மாரிமுத்து வரவேற்புரை யாற்றினார். தென் சென்னை மாவட்டத் தலைவர் சா.டேனியல் ஜெய்சிங், வடசென்னை மாவட்டத் தலைவர் எம்.அந்தோணிசாதிதி, அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவர்கள் பி.எஸ்.அப்பர், எஸ்.ஏ.வெற்றிராஜன், பொதுப் பணித் துறை கணக்கு மற்றும் ஆட்சியர் பணி அலுவலர் சங்க பொருளாளர் சா.ஆண்டியப்பன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். வேலை வாய்ப்புத் துறை இணை இயக்குநர் எஸ்.விஜயகுமார் பணி ஓய்வு ஆணையினை வழங்கி சிறப்புரை யாற்றினார். அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். அடையாறு பகுதிக் குழு செயலாளர் அண்டனி நன்றி கூறினார். நிறைவாக இராசையா ஏற்புரையாற்றினார். இந்நிகழ்வில் 20 பெண் ஊழியர்கள் உட்பட 75 பேர் பங்கேற்றனர்.

தென் சென்னை மாவட்ட முன்னாள் இணைச் செயலாளர் அண்ணாதுரை (மூத்த கண்காணிப் பாளர், கணக்கு கருவூலத் துறை) 31.07.2017 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு, மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி, தென் சென்னை மாவட்டத் தலைவர் சா.டேனியல் ஜெய்சிங், தென் சென்னை மாவட்டத் தலைவர் எம்.வெங்கடேசன், மாவட்ட பொருளாளர் ப.புகழேந்தி, துணைத் தலைவர்கள் கி.ரகுராமன், சா.ஆண்டியப்பன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

# பயிற்சி வகுப்பு

## திருவள்ளூர்

தமிழ்நாடு அரசு உழியர் சங்கம் சார்பில் பயிற்சி வகுப்பு 8.7.17 அன்று மாவட்டத் தலைவர்






கோ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஜா.வே.அருள் டேனியல், வரவேற்புரையாற்றினார்.

"சங்க இயக்கமும் தோழர்களின் இலக்கண மும்" என்ற தலைப்பில் மாநிலத் துணைத் தலைவர் வி.ஞானதம்பியும், "ஊதிய மாற்ற பரிந்துரைகளும் அரசு ஊழியரின் நெடுந் துயரங்களும்" தலைப்பில் பொதுச் செயலாளர் மு.அன்பரசும் வகுப்பு எடுத்தனர். இதில் மாவட்ட, வட்ட நிர்வாகிகள், துறை சங்க நிர்வாகி கள், முன்னணி ஊழியர்கள் கலந்துக்கொண்டனர். நிறைவாக மாவட்ட பொருளாளர் எஸ்.காந்திமதிநாதன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## வடசென்னை

மாவட்ட அளவிலான பயிற்சி வகுப்பு ஜுலை 2 அன்று எழும்பூரில் உள்ள காஞ்சி ஓட்டலில் மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி வரவேற்றார். ''ஊதிய மாற்றப் பரிந்துரைகளும் அரசு ஊழியர்களின் நெடுந்துயர்களும்'' என்ற தலைமையில் மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வியும், ''சங்க இயக்கமும் தோழர்களின் இலக்கணமும்'' என்ற தலைமைப்பில் பொதுச் செயலாளர் மு.அன்பரசும் வகுப்பெடுத்தனர். உணவு இடைவேளைக்கு முன்பாக சங்கத்தின் பகுதிக் குழுக்களில் நிர்வாகியாகவும், வணிகவரிப் பணியாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளராகவும் இருந்து செயல்பட்டு 30.6.2017 அன்று ஓய்வு பெற்ற கு.முருகனுக்கு பணி ஒய்வு பாராட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிறைவாக மாவட்ட பொருளாளர் ச.பார்த்திபன் நன்றி கூறினார். இதில் 110 ஊழயர்கள் பங்கேற்றனர்.

## மதுரை

8.7.2017 அன்று ஸ்ரீஅரவிந்தர் மீரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எம்.முருகன் தலைமையேற்றார். மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ஜெயராஜ் ராஜேஸ்வரன் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் முனைவர் சு.கிருஷ்ணன் விளக்கவுரையாற்றினார். ''சங்க இயக்கமும் தோழர்கள் இலக்கணமும்'' என்ற தலைப்பில் மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வமும், ''ஊதிய மாற்ற பரிந்துரைகளும், அரசு ஊழியர்களின் நெடுந்துயர்களும்'' என்ற தலைப்பில் எம்.சௌந்தரராஜ உரையாற்றினார்.

அரசு ஊழியர் இதழ் சேர்ப்பில் முதலிடம் வகித்த மதுரை வடக்கு வட்டக்கிளை, இரண்டாம் இடம் பெற்ற மதுரை கிழக்கு வட்டக்கினை, மூன்றாமிடம் வகித்த மதுரை மேற்கு வட்டக்கிளை நிர்வாகிகளுக்கு கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிறைவாக வாடிப்பட்டி வட்டக்கிளை செயலாளர் மேல்மயில் செல்வி பாராட்டு விழா நடத்தப்பட்டது. அன்னாரின் சங்க செயல்பாடுகள் குறித்து மாவட்டச் செயலாளர் தனது பாராட்டுரையில் தெரிவித்தார். மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.வேலுமணி நன்றி கூறினார். இதில் 23 பெண் ஊழியர்கள் உட்பட 98 பேர் பங்கேற்றனர். ❖

### ஆர்.எம்.எஸ். இரங்கல் கூட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கரூர் மாவட்ட மையம் சார்பில் ஆர்.எம்.எஸ். நினைவு இரங்கல் கூட்டம் 31.07.2017 மாலை 6.00மணி அளவில் அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் மு. மகாவிஷ்ணன் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன், து.சாமுவேல் சுந்தரபாண்டியன், வி.மோகன்குமார், கெ.சக்திவேல் மாவட்ட செயலாளர், பொன்.ஜெயராம் மாவட்ட பொருளாளர் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்று இரங்கல் உரையாற்றினர்.